Regd No M. 4000. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 6-12-1947 சனிக்கிழமை { மலர் 13.

★ அறிஞர்களே! ஆராய்ந்து பாருங்கள். ★

★

உலகத்தை எல்லாம் உண்டாக்கி அதிலுள்ள எல்லாவற்றையும் நடத்தும் ஒரு சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரால்தான் (அவர் இஷ்டப்படி) உலகம் இயங்கு (நடை பெறு)கின்றது என்று சொல்லப்படுமானால் அவரை நடுநிலைமையுடையவரென்று சொல்லுவதைவிடப் பாரபட்சமுடையவரென்று சொல்லுவதற்கே மிக மிக இடமிருக்கின்றன.

அவரைக் கருணை உடையவர் என்று சொல்லுவதைவிட கருணையற்றவர் என்று சொல்லுவதற்கே ஏராளமான பிரத்தியட்ச உதாரணங்கள் இருக்கின்றன.

அவரை நீதிவான் என்று சொல்லுவதைவிட அநீதிவான் என்று சொல்லுவதற்கே தாராளமான ஆதாரங்கள் அதிகமிருக்கின்றன.

அவரால் உலகத்திற்கு நன்மை ஏற்படுகிறதென்று சொல்லுவதைவிட அவரால் அதிகத் தீமையே ஏற்படுகின்றது என்று சொல்லுவதற்குப் போதுமான ஆதாரமிருக்கின்றது.

அவர் அறிவாளி என்று சொல்வதைவிட மூடர் என்று சொல்வதற்கே போதுமான ருஜு இருக்கின்றது.

(அதுவே முடிந்த முடிவானால்) அப்படிப்பட்டவரை யோக்கியர் என்று சொல்லுவதைவிட அயோக்கியர் என்று சொல்லுவதற்கே திருஷ்டாந்தங்கள் பல இருக்கின்றன.

அவர் ஜீவன்களுக்கு நன்மையே செய்கிறாரென்பதைவிட தீமையே செய்கின்றார் என்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

அவரால் நன்மை அடைந்தவர்களைவிடத் தீமையடைந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லத்தகுந்த அத்தாட்சிகள் மிதந்து கிடக்கின்றன.

அவர் நாகரீகமுடையவரென்று சொல்லுவதைவிட அவர் காட்டுமிராண்டி என்று சொல்லுவதற்கே

சித்திர புத்திரன்

அளவுக்கு மீறிய அனுபவங்கள் காணப்படுகின்றன.

அவர் இருந்தால் நல்லது என்று சொல்லுவதைவிட அப்படிப்பட்டவர் ஒருவர் இல்லாமல் இருந்தால் நல்லது என்று ஆசைப்படுவதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

அப்படி ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதைவிட, அப்படி ஒருவர் இல்லை என்று வாழ்க்கையை நடத்துவதே, மனித சுதந்தரத்திற்கு அதிகமான நன்மை பயக்கத்தக்கது என்று கருதுவதற்கு வேண்டிய அவசியங்கள் பல இருக்கின்றன:-

அறிஞர்களே ஆராய்ந்து பாருங்கள்.

* *

சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருந்தால் மனிதனுடைய தேவைக்கும் ஆசைக்கும் தகுந்தபடி நடந்துகொண்டிருப்பார். அல்லது கடவுளுக்கு இஷ்டமில்லாத விஷயங்களைப்பற்றி மனிதனுக்குத் தேவையில்லாமலாவது ஆசையில்லாமலாவது அல்லது நினைப்புக்கே வராமலாவது செய்திருப்பார்.

உதாரணமாக மனிதன் தனக்கு முகத்தில் மயிர் வேண்டியதில்லையென்றுகருதித் தினம் தினம் சவரம் செய்துகொள்வதைப் பார்க்கின்றோம். ஆனால் கடவுள் அனுக்கிரகத்தால் அது தினம் தவறாமல் முளைத்துக்கொண்டே வருவதையும் பார்க்கின்றோம்.

இது என்ன, கடவுளுடன் மனிதன் எதிர்த்தாற்போல் [illegible] நடந்து போட்டிபோடுகின்றானா? அல்லது மனிதனுடன் கடவுள் எதிர்த்தாற்போல் நடந்து போட்டி போடுகின்றாரா? அல்லது ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் அவரவர் காரியத்தை அவரவர்கள்பார்க்கின்றார்களா?

சிறுவர் பகுதி:

சந்தேகம் கேட்கும் சிறுவர்களுக்குப் பரிசு......

அடியும், உதையும்.

(அண்ணா)

★

செல்வன்:- என்ன சுந்தரம்! உங்க அப்பா உன்னை ஏதோ மிரட்டிக்கொண்டு இருந்தாரே என்ன சங்கதி?

சுந்தரம்:- அது ஏன் கேட்கிறாய். பெரியவர்கள் என்றுதான் அவர்களுக்குப் பேரேதவிர நாம் ஏதாவது சந்தேகம் கேட்டால் சண்டைக்கு வந்துவிடுகிறார்கள்.

செல்:- அப்படி என்ன சந்தேகம்! அவருக்குக் கோபம் வருகிற மாதிரி கேட்டுவிட்டாய்?

சுந்:- சொல்லுகிறேன் கேள். நீயெல்லாம் கிராப் வைத்திருக்கிறாயல்லவா? அதுமாதிரி நானும் கிராப் வைத்துக்கொள்ள வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளாக ஆசை. அம்மாவிடம் ஒரு தடவை சொன்னேன். அதற்கு அவர்கள் “வேண்டாண்டா சாமி! குலதெய்வத்துக்குப் பழனிக்கு முடிவிட்டிருக்கிறது: அங்கு போய் முடி எடுத்துக்கொண்டு வந்தபிறகு வேண்டுமானால் கிராப் வைத்துக் கொள். அதற்கு முந்தி அவசரப்படாதே” என்று சமாதானம் சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு என் அப்பா என்னிடம் ரொம்பப் பிரியமாகப் பேசிக்கொண்டிருந்தார். இதுதான் நல்ல சமயம் என்று நினைத்து “அப்பா! நான் ஒன்னு கேட்கிறேன். கோபித்துக் கொள்ள மாட்டீங்களே?” என்றேன். அதற்கு அவர் “நீ கேட்பதற்குக்கூட நான் கோபிப்பேனா? கண்ணு' தாராளமாகக் கேள்! என்னவேண்டுமானாலும் கேள்! நான் வாங்கித் தருகிறேன்” என்றார். உடனே நான் “எனக்கு ஒன்னும் வாங்கித்தரவேண்டும் என்று கேட்கவில்லை. ஒருநாள் அம்மாவிடம் நான் கிராப் வைத்துக்கொள்ள ஆசையாயிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அம்மா, குலதெய்வத்துக்கு முடி விட்டிருக்கிறது என்று கூறினார்கள். ஏன் அப்பா! குலதெய்வம் நம்ம முடியை வாங்கி என்ன அப்பா செய்யும்? ஒருசமயம் நம்ம முடியையெல்லாம் எடுத்து “கவுரிமா மயிர்” என்று கட்டிக் கடைவீதிகளில் விற்று நம்ம சாமி வைத்து கொள்ளுகிறதா அப்பா?” என்று கேட்டுவிட்டேன். உடனே எங்க அப்பா என்னை ஒரு தள்ளுத்தள்ளி ஏண்டா அயோக்கியப் பயலே! நம் குலதெய்வத்தைப் போய் மயிர்க்கடை வைத்துச் சம்பாதிக்கிறதா என்று கேட்கிறாயே? நீ உருப்படுவாயா? ....” என்றெல்லாம் உளறிக்கொண்டு அடிப்பதற்காகப் பிரம்பைத் தேடிக்கொண்டிருந்த சமயம் என் அம்மா வந்து “சரிதான் போங்க, தெரியாமே பையன் ஏதாவது கேட்டுவிட்டால் அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா?” என்று சொல்லி ஒருவாறு சமாதானப்படுத்தியாகிவிட்டது என்றாலும் இன்னும் அப்பா என்னிடம் பேசுவதில்லை. இதுதான் விஷயம்.

செ:- இவ்வளவுதானா சங்கதி. நானும் பார்க்கிறேன், பெரியவங்க என்பவர்களே சிறுவர்கள் ஏதாவது சந்தேகம் கேட்டால் சீறித்தான் விழுகிறார்கள். நாம் கேட்கிற சந்தேகத்துக்கு ந்யாயமாப் பதில் சொல்லத் தெரிந்தால் எதற்காக கோபம் வரவேண்டும்? இதற்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாமல்விழித்தால், கேவலம் என்று நினைத்துக்கொண்டு நம்மீது கோபித்துத் துரத்திவிடுகிறார்கள்போலிருக்கிறது. தாய், தகப்பன்மார்கள்தான் இப்படி என்று நினைத்துக்கொள்ளாதே. வாத்தியாயர் கூட இந்தமாதிரிதான். ஒருநாள் நான் எனது வாத்தியாரிடம் “ஏன் சார்? புஸ்தகத்திலே ஒரு இடத்திலே ஐயர் என்று போட்டிருக்கிறது; மற்றொரு இடத்திலே ஒட்டன் என்று போட்டிருக்கிறது. ஏன் ஐயர் என்பதற்குப் பதிலாக ஐயன் என்று போடக் கூடாதா? அல்லது ஒட்டன் என்பதற்குப் பதிலாக ஒட்டர் என்று போடக்கூடாதா? இரண்டும் ஒரே மாதிரி இருந்தால் நல்லதல்லவா?” என்று கேட்டுவிட்டேன். உடனே வாத்தியார் நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை. மளமளவென்று என் கிட்ட வந்து “படிச்சு ஒப்பிக்கச் சொன்ன பாடத்தை இன்னும் ஒப்பிக்கக் காணோம்! இந்த லட்சணத்தில் சந்தேகம் கேட்க வந்து விட்டாயோ? அதிகப் பிரசங்கி” என்று கூறி முறைத்துப் பார்த்து என்னை உட்கார வைத்து விட்டார்.

(சுந்தரனும் செல்வனும் பேசிக் கொண்டிருக்கும் இடத்துக்கு அன்பு வருகிறான்.)

அன்பு:- என்ன ரெண்டு பேருமாத் தனியாக உட்கார்ந்து கொண்டு ரகசியம் பேசுகிறீர்களா?

சு:- ரகசியமெல்லாம் ஒன்றும் இல்லை. நம்ம பெரியவங்களை ஏதாவது சந்தேகம் கேட்டால் உடனே நமக்குத் திட்டு, மிரட்டு, உதை, அடி இவைகள் தான் பரிசாகக் கிடைக்கிறதே தவிரப், பதில் கிடைப்பதில்லை என்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

அ:- நல்ல வேளையாக ஞாபகப் படுத்தினாய்! நீ சொல்லுகிற மாதிரி நமது பெரியவர்களையோ, வாத்தியார்களையோ நாம் சந்தேகம் கேட்டால், அவர்கள் நம்மை அடக்கி வைத்து விடுவதனால் மேல்கொண்டு நாம் எதுவுமே கேட்க முடியாமல் போய் விடுகிறது. அதனால் அனேகம் சந்தேகங்கள் சந்தேகமாகவே இருந்து விடுகிறது. அதனால் நமது அறிவு வளர மார்க்கமே இல்லை. நான் இதற்கு ஒரு யோசனை செய்திருக்கிறேன்.

செ:- அதென்ன யோசனை?

அ:- நாம் எல்லோரும் ஒன்று கூடி ஒரு சங்கம் வைத்துக் கொள்வோம். நமக்குள் ஏற்படும் சந்தேகங்களையும், மற்றும் பலவற்

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

ரோஜா முத்தையா

உண்மை இராமாயணம் நாடகம்

காட்சி 6.

[விசுவாமித்திரன், இராமன், இலட்சுமணன் ஆகிய மூவரும் வனத்தில் நடக்கின்றார்கள்.]

இராமன்:- முனிவரே! இக்காட்டின் பெயரென்ன? இந்தக்காடு ஏன் இப்படிப் பாழாய்க் கிடக்கிறது?

விசுவாமித்திரன்:- இராமா! இது முன் ஒரு காலத்தில் விருத்திராசுரன் என்னும் அசுரனைக் கொன்ற இடம். நாம் தேவர்கள் அல்லவா? நமக்கு எதிரிகள் அசுரர்கள் அரக்கர்கள் இராக்கதர்களல்லவா? வேத காலந்தொட்டே சம்பராசுரன், விருத்திராசுரன் முதலாகிய பல அசுரர்கள் தென்னாட்டு அரசர்களாக இருந்து நமக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். நம்மை இந்தத் தென் தேசத்திற்குள் கால் வைக்க அவர்கள் இடம் கொடுப்பதில்லை. அதனால் அவர்களை நாம் அடிக்கடி கொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக் கொல்லப்பட்டவர்களுக்குள் விருத்திராசுரன் ஒருவன். இது அவனைக் கொன்ற இடம்.

இராமன்:- முனிவரே! நாம் இப்போது எங்கே போகின்றோம்?

விசுவாமித்திரன்:- இராமா! நாம் யாக சாலைக்குப் போகின்றோம். அங்கே நான் ஒரு யாகம் செய்கின்றேன். அதைத் தாடகி என்ற அரக்கி அழித்து விடுகின்றாள். அவள் இராவணனது அத்தை. இப்போது அவள் யாக சாலைக்கு வருவாள். நீ ஒளிந்திருந்து அவள் மீது அம்பு எய்து அவளைக் கொல்ல வேண்டும்.

இராமன்:- முனிவரே! பெண்ணைக் கொல்லலாமா? அதுவும் ஒளிந்திருந்து கொல்லலாமா?

விசுவாமித்திரன்:- இ ரா ம ா! அதைப்பற்றிக் கவலைப்படாதே. இந்திரன்கூட எவ்வளவோ பெண்களைக் கொன்றிருக்கின்றான். தேவர்களாகிய நமக்கு எவ்விதச்சாஸ்

பெரியார் ஈ.வெ.ரா

திரமும் சட்ட திட்டமும் ஒழுக்க வழி முறையும் கிடையாது. காரியமே பெரிது. நாம் செய்வதெல்லாம் சரியானது.

இராமன்:- சரி. தங்கள் ஆக்கினைப்படி எதையும் செய்கிறேன்.

[காட்சி முடிந்து திரை விடப்படுகிறது.]

காட்சி 7.

[யாக சாலை. கழுதை, குதிரை, மிருகம், பட்சி முதலியனவும் கள் குடங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. யாகப் புரோகிதர்கள் மாம்சத்தின் பெருந்துண்டை நெய் தடவி மந்திரம் சொல்லிக் கொண்டு நெருப்பில் வாட்டுகிறார்கள்.]

விசுவாமித்திரன்:- இராமா! யாக சாலையைப் பார்த்தாயா?

இராமன்:- பார்த்தேன். மிக மகிழ்ச்சியாய் இருக்கிறது. மது மாம்சம் மலைமலையாய் கிடக்கிறது. மாம்சத்தை நெருப்பில் கருக்கும் வாசம் தெய்வலோகத் தேவர்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கும் போலிருக்கிறது.

[தாடகை யாகசாலையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றாள்.]

விசுவாமித்திரன்:- இ ரா ம ா! அதோ! அங்கு தாடகை என்கின்ற அந்த இராட்சசி வருகிறாள் போல் தோன்றுகிறது. சத்தம் ஆரவாரம் கேட்கிறது. நீ போய் அந்த மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொள். நான் "உம்" என்னும் போது அவள் மார்பைக் குறி பார்த்துப் பாணத்தை விடு.

[இராமன் ஒளிந்து கொள்கின்றான். தாடகை வருகின்றாள்.]

தாடகை:- யாரடா? இந்தக் கொலைகாரக் குடிகாரப் பயல்கள். உங்கள் நாடு எது? இங்கு என் எல்லைக்குள் ஏன் வந்தீர்கள்? எத்தனை நாளைக்கு உங்களுக்கு இங்கு வரக்கூடாது என்று புத்தி சொல்வது? கூட்டம் கூட்டமாய் வருவதும் குடிசைகள் போட்டுக் கொள்வதும், இங்குள்ள வாயில்லாச் சீவன்களை வலை கட்டிப் பிடித்துப் பாவம் பதறப்பதற அடித்துக் கொல்வதும், அவைகளைச் சுட்டுப் பொசுக்குவதும், குடம் குடமாய்க் கள்ளை அருந்திக் கொண்டு ஆபாசமான வார்த்தைகளால் கூப்பாடு போட்டுக் கூத்தாடிக் கொண்டு தின்பதும், இயற்கைக்கு விரோதமான காரியங்களைச் செய்து கொண்டு களியாட்டம் ஆடுவதும், இது என்ன புத்தி உங்களுக்கு? நீங்கள் என்ன மனிதப் பிறவிகளா? காட்டுமிராண்டிகளா? ஒழுக்கம், ஜீவகாருண்யம், அன்பு என்பவை ஒன்றும் உங்கள் கூட்டங்களுக்கு அறவே கிடையாதா? பாவிகளா! கொலை பாதகர்களா? நீங்கள் என் நாட்டை விட்டுப் போய்விட மாட்டீர்களா? இது கடைசித் தடவை. மரியாதையாய் ஓடி விடுங்கள். இனி இந்தப் பக்கம் காலெடுத்து வைப்பீர்களானால் உங்கள் உடலை விட்டு உயிர் பிரிந்து விடும். எச்சரிக்கை! எச்சரிக்கை! என்ன

சுயமரியாதை இயக்கம் தோன்றியது எதற்கு?

[கைவல்யம்]

★

நித்தியராய், சர்வ சக்தியுள்ளவராய், சர்வக்ஞராய், சர்வ தயாபரராய், சர்வ வியாபகராய், நிஷ்களராய், நிரஞ்சனராய் இத்தனையும், இதற்கு மேலும், நீழும் தானே தானாய் விளங்குகிறவர் எவரோ அவரே கடவுள். அதுதானா கட்வுள்? அப்படித்தான் கடவுளிருப்பாரா?என்பதையும், அந்தக்கடவுள்உலகத்தைச் சிருஷ்டித்தாரா? இல்லையா? உல்கம் தானே உண்டாயிற்றா? உண்டாகவேயில்லையா? உலகமும், கடவுளும் ஒன்றா? இரண்டா? என்பதையும் அந்தஉலகத்தில் பணக்காரன், ஏழை, பலவான், பலயீனன், அறிவாளி, அறிவில்லாதவன், நோயாளி, நோயில்லாதவன், அழகுடையவன், குரூபி, குருடன், செவிடன், ஊமை, இவ்விதமான பட்சபாதங்களும், இறப்பெனும் கொடுமையும், மைந்தர்களை இழந்த மாதாவின் மாற்றொணாத்துக்கமும், இளமையிலுள்ள மரணமும், ஒருபிராணி மற்றொரு பிராணியைச் சின்னா பின்னமாகக் கிழித்தெறிவதும், ஒருவன் அயலானைப் பிடித்துத் தள்ளி அவன்மேலேறி மிதிப்பதுமாகிய போட்டியும், கொடுமையும், அரண்மனை, வீடு, தோப்புத்தோட்டம், அதில் குடும்ப வாழ்க்கை, ஆஸ்பத்திரி, அதில்நோயாளி, விர்த்தாப்பியன், வைத்தியன், தாதி அதற்குப்பக்கத்தில் ஆறு, குளம், அதற்கடியில் அக்கினிமலை, அது கக்கும் அக்கினியால் அவையனைத்தும் அழிந்துபோகும் காட்சி, பெருங்காற்றாலும், தண்ணீராலுமுண்டாகும் பெருந்துன்பம் முதலாகிய இவைகளைவாய்ப்பாடாகக் கொண்ட இந்த உலகத்தை அந்தக்கடவுள் சிருஷ்டித்தார் என்று சொல்லுவதையும், அந்தக்கடவுள் தன்மைக்கு அது பொருந்துமாவென்பதையும் கடவுள் உண்டா? இல்லையா? வென்பதையும் தர்க்கம் செய்வதற்காக சுயமரியாதைச்சங்கம் வந்ததல்ல.

எதற்கும் மேலாம் ஒருசக்தி இருக்கின்றதென்பதையும், அச்சக்தியே கடவுளென்பதையும், அதையே ஆத்மாவென்றும், அறிவென்றும், கர்மமென்றும், அனுதியென்றும் சொல்லப்படுவதை மறுக்கவும் வந்ததல்ல. பின்சுயமரியாதைச் சங்கம் கடவுளைப்பற்றியென்ன சொல்லுகின்றதென்றால், கடவுள் என்கிற கிணற்றின் ஆழத்தைக் காண உன்புத்திக்கு சக்தியில்லை என்று புத்தர் சொன்னது போலவும், கடவுளை வேதத்தாலும் காணமுடியாதென்று இந்துஞானிகள் சொன்னது போலவும், உன்னுடைய கர்மமான தொழிலே கடவுள்என்று இந்துசாஸ்திர தத்துவங்கள் சொன்னதுபோலவும் கடவுள் உலகத்தையும், அதிலுள்ளதையும், மனிதனுக்காகச் சிருஷ்டித்தார் என்று மற்றமதங்கள் சொல்லுவது போலவும், கடவுளைப்பற்றிய கவலை உனக்குவேண்டாம், உனக்குமுன்னாலிருக்கின்றவேலைகளை நீசெவ்வையாகச்செய் என்றே சுயமரியாதைச் சங்கம் சொல்லுகின்றது.

அதோடுநில்லாமல் உலகப்போட்டிக்கும் பட்சபாதத்திற்கும் காரணம் கடவுளல்ல, நாமேஎன்றும் சொல்லுகின்றது. அவர்தலையில் எல்லாக்குற்றங்களையும் ஏற்றி விடுவதைவிட நம் குற்றங்களை நாமேற்றுக் கொண்டால் நமது குற்றங்களை நாம் உணர்ந்தவர்களுமாவோம். எல்லா பூமிகளிலும் சமமாகவே மேகம் மழையைப் பொழிவதாயினும், நன்றாய் உழப் பெற்ற நிலம் மாத்திரமே மழையின் பிரயோஜனத்தைப் பெறுவதல்லாமல் அவ்வாறு உழப்பெறாத நிலம் அந்தப்பயனைப்பெறுவதில்லை. அப்படிப்பெறாதது மேகத்தின்குற்றமன்று. அதுபோலவே கடவுளின்கிருபை என்பதும் 'நித்தியமாயும்' எப்பொழுதுமாறாததாயுமிருந்தாலுங்கூட, இவ்வுலக இன்பங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு நம்மறிவும்பிரயத்தன முமே வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம்சொல்லுகின்றது. அப்படியிருக்கச் சுயமரியாதை இயக்கத்தைநாத்திக கொள்கையென்றும் நாஸ்திகமென்றும் சொல்வதுநியாயமல்ல, பிரயோஜனமுமல்ல. அப்பழியைஅதன் தலையில்சுமத்தவும் முடியாது. ஏனென்றால் எந்தக்கடவுளுக்கும், எந்த உலகத்திற்கும் அதன் கொள்கை அவசியமானதாகவேயிருக்கிறது. அதன் கொள்கைகளை ஒத்துக் கொள்ளாதகடவுளையும் உலகத்தையும் அறிவாளிகள் விரும்புவதில்லை. நமது தேசத்திலுள்ளமடாதிபதி, லோககுரு மகுருதுமுதல்தாசன், ஆண்டிவரையிலும் இவ்வுலக இன்பத்திற்கே பாடுபடுவதைப்பார்க்கின்றோம். ராஜாவிலிருந்து பிச்சைக்காரன்வரையிலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே அவரவர்கள் தொழில் நடக்கிறது. கடவுள் கைங்கரியமென்னும் தொழில் சமூகங்களின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் ஏற்படுத்தியிருக்கலாம். அவை இப்பொழுது அப்படியில்லை. மனிதனை மனிதன் ஏமாற்றவும், இழிவுபடுத்தவும், அடிமைகொள்ளவும் ஏற்பட்டு, ஒருகூட்டத்தாரும், ஒருசிலரும் ஆடம்பரமாக வாழ்வதற்கே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்றே சுயமரியாதைச் சங்கம் சொல்லுகின்றது. அவைகளைப் பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டுகையில், கடவுள்பேரால் ஏமாற்றிப் பிழைப்பவர்கள் சுயமரியாதை இயக்கத்தைக் குற்றம் சொல்லுகின்றார்கள். அக்குற்றத்தை நிலைநிறுத்த நாத்திகரென்கின்றார்கள். ஸ்மிருதிகளிலுள்ள கர்மபாகங்களையும் ஒத்துக்கொள்ளாதவன் நாஸ்திகன் என்பதை நம்மிலுள்ள பலபண்டிதர்கள் உணர்வதில்லை. திருஞானசம்பந்தருடைய தேவாரப்பாட்டுச் சிலவற்றிற்குச் சைவப்பண்டிதர்கள் இன்னும் சரியான அர்த்தமும் செய்யவில்லை. சரியாக அர்த்தம் தெரிந்த பண்டிதர்கள்கூட வழியில்லாமல் பழக்கத்தில் பதிந்து விட்டார்கள். திருஞானசம்பந்தர் சமணர்களைநாத்திகரென்றும் இன்னும் பலவாறாகவும்இகழ்ந்து சொன்னதற்கு காரணமென்ன? கடவுளைக் குற்றம் சொன்னதினாலா? வேதத்திலுள்ள கர்மபாகத்தைக் கண்டித்ததினாலா? ஏமாற்றும் கர்மபாகங்கள் இனியுமொழிந்து உண்மையாய் உலகத்திற்கு உபயோகப்படும் தருமபாகம் வரவேண்டுமென்றே சுயமரியாதைஇயக்கம் சொல்லுகின்றது.

நாம்பண்டைக்காலப்பெருமைகளைப் பேசிப்பேசி இக்கால உலகத்தார்களின் சபைகளில், நம்முடைய கௌரவம் சிறு

[தொடர்ச்சி 15ம் பக்கம்]

தைரியம் இவர்களுக்கு. ஒருவருடைய எல்லைக்குள் வந்து இவ்வளவு கொலைபாதகமா?

விசுவாமித்திரன்:- இவளைக் கொல்லுங்கள்.

இராமன்:- வில்லில் அம்பை வைத்து இழுத்துத் தாடகைமீது அம்பெய்ய முயலுகிறான்.

தாடகை:- கல்லால் அடிக்கிறாள்.

இராமன்:- தாடகையின் கைகளைத் துண்டிக்கிறான்.

இலட்சுமணன்:- தாடகையின் மூக்கையும் காதையும் அறுக்கின்றான்.

இராமன்:- பாணம் விடுகிறான்.

தாடகை:- கீழே சாய்கிறாள்.

[காட்சி முடிகிறது]

50 ரூ. முதலீடு, மாதம் 500 ரூ. வருமானம்!

★

"50ரூபாய் முதலீடு இருந்தால் மாதம் 500 ரூபாய்க்கு குறைவில்லாமல் சம்பாதிக்கலாம்" என்று எனது நண்பர் சொன்ன உடனே இதென்ன ஆச்சரியம்! 50ரூ முதலீடு; மாதம் 500ரூ வருமானம்!!" என்று திகைத்துப்போனேன். மேல்கொண்டும் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன்; ஏமாந்தேன். ஆனாலும் என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. "இதென்னப்பா? ரகசியம்" என்றேன். அதுவா! என்று கேட்டு ஒரு அசட்டுச்சிரிப்புச்சிரித்துக் கொண்டே "அதெல்லாம் உனக்குத் தோதுப்படாது. நீஎப்போ பார்த்தாலும் கட்சி-கொள்கை இவைகளைக் கட்டிக் கொண்டுஅழுகிறவனாச்சே. பிழைக்கத் தெரியாத உன்னிடம்போய் நான்எதையாவது சொன்னால் நீயும்பிழைக்கமாட்டாய் வேறுயாரையும் பிழைக்கவும்விடமாட்டாய். அதாவது தொழில்ரகசியத்தை எல்லோரிடமும் உளறிக் கொட்டிவிடுவாய்" என்று சொல்லி முடித்து விட்டார் நண்பர். எனக்கு என்னமோ நிம்மதியே ஏற்படவில்லை எப்படியாவது அதென்னவழி என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுமுடிவு செய்துகொண்டு "நான் எந்தக்காரணம் கொண்டும் யாரிடமும் சொல்வதில்லை தயவுசெய்து விபரமாய்ச் சொல்" எனவேண்டிக்கொண்டேன்.

"சரி அப்படியானால் சொல்லுகிறேன்கேள். உனக்குப் பிடித்தால் ஒரு கை நீயும் பார். பிடிக்காவிட்டால் பேசாமல்இருந்துகொள். வேறுஒன்றும் இல்லை. இப்போ காங்ரஸ் சர்க்கார் ஏற்பட்டுவிட்டதல்லவா? ரொம்ப ரொம்பசாதாரண ஆட்களெல்லாம் எம். எல். ஏ-க்களாகவும் மந்திரிகளாகவும் வந்துவிட்டார்கள்! வரட்டும். அதைப்பற்றி நமக்கும் சந்தோஷம்தான்! ஆனால் ஆளவந்த மந்திரிமார்கள் அதிகாரிகளின் வேலைகளில் எல்லாம் குறுக்கிட்டு "அதை அப்படிச்செய். இதை இப்படிச் செய்யாதே! இது நம்மவர்கள் விஷயம்; கேஸை வாப்ஸ் வாங்கிக் கொள்ளுங்கள், அதுவா? எப்படியாவது செய்து கொடுங்கள்" என் பன போன்று சொல்லிவருவதால் நிர்வாக அதிகாரிகளுக்கெல்லாம் ஒரு வித சலிப்பே ஏற்பட்டு விட்டது. அது ஒரு புறமிருக்க ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற காங்கிரஸ் தியாகிகள்-தலைவர்கள்-காரியதரிசிகள் - பேச்சாளர்கள் - தொண்டர்கள் - ஊழியர்கள் எனப்படுவோரெல்லாம் எடுத்ததற்கெல்லாம் அதிகாரிகளிடம் போவதும், மிரட்டுவதும், அதிகாரிகள் சொன்னபடி கேட்காவிட்டால் மந்திரிமார்களிடம் கோள் சொல்லுவதும், தொல்லை கொடுப்பதுமான காரியத்தில் இறங்கியிருப்பதினால் அதிகாரிகளுக்கெல்லாம் "எது எக்கேடு கெட்டால் நமக்கென்ன? நாம் நாளை எண்ணிக் கொண்டு கதர்ச் சட்டைக்காரர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு காலந்தள்ளி விட்டால் போகிறது" என்ற எண்ணம் வலுத்துப் போய்விட்டது. எனவே சாதாரண சின்ன ஆபீஸிலிருந்து செகரட்டேரியேட் வரையிலும் நல்ல தூயகதர் ஆடை உடுத்திக் கொண்டு - சேர பேட்ஜ் குத்திக் கொண்டு - யாரையும் லட்சியப் படுத்தாமல் எதுவரையிலும் வேண்டுமானாலும் போகலாம். யாரும் தடுத்துவிட மாட்டார்கள். எங்கே போகிறீர்கள் என்றுகூடக் கேட்கமாட்டார்கள். அவ்வளவு பயம் அனைவருக்கும். இதுவரையிலும் நான் சொன்னதிலிருந்து ஆள வந்தோர்களின் போக்கையும், அதிகாரிகளின் மனப்பான்மையையும் தெரிந்து கொண்டிருப்பாய் என்று நம்புகிறேன்.

இனித்தான் இருக்கிறது விஷயம். மேற்சொன்ன நிலைமையைப் பயன்படுத்தி நாம் ஒரு காரியம் செய்தால் என்ன? என்று ஒரு நாள் தீவிரமாக யோசித்தேன். நம்ம ஊர் எம். எல். ஏ. நமது மாஜித் தோழராயிற்றே அவரிடம் உண்மையைச் சொல்லிக் கேட்டுப் பார்ப்போமே என்ற முடிவுடன், ஒரு நாள் மவுன்ட் ரோட்டிலுள்ள சர்க்கார் மாளிகையில் அவரது அறையில்போய் சந்தித்து விஷயத்தை மனம் விட்டுப் பேசி அவரிடமும் ஒரு தினுசான ஒப்பந்தமும் செய்து கொண்டேன். அவரும் "அப்படி ஒருசமயம் விஷயம் மீறிப்போனால் நான் மேலதிகாரிகளைப் பார்த்து ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறேன்" என் வாக்களித்தார். அத்துடன் நம்ம ஊர் தலைவருக்குப் போட்டியாக மட்டும் நீ போய் யாரிடமும் வியாபாரம் செய்யாதே என்றும் எச்சரித்து அனுப்பினார்.

உடனே நேராக சுத்தக் கதர்கடைக்குப்போய் 15 ரூபாய்க்கு ஜவுளி எடுத்து முதலில் ஒரு செட் தயாரித்துக் கொண்டேன். அங்கிருந்து நேரே பீர், பிராந்தி ஷாப்புக்குப்போய் மிச்சமுள்ள 35 ரூபாய்க்கு சரக்கு வாங்கி எனது "ஹோல்ட்ஆல்" படுக்கையில் வைத்துக் கொண்டு ஊர் வந்தேன். யாரையோ போலீஸார் பரிசோதித்துப்பார்த்தார்கள். என் கிட்டவா அவர்களுக்கென்ன பைத்தியமா? நேரே வீடு வந்தேன். யுத்தகாலப் பணக்காரனான சபாபதியிடம் மறுநாள் விஷயத்தைச் சாடையாகச் சொன்னேன். உடனே அவன் ரூ 150 என்னிடம் கொடுத்து அவனுடைய "கைத்தடியாக" இருக்கும் ஒரு ஆளையும் அனுப்பினான். அவனிடம் சென்னைச் சரக்கைக் கொடுத்து விட்டேன்.

அதிலிருந்து வாரம் இருமுறை சென்னை பயணம். ஆகவே, மாதத்தில் என்ன குறைந்தாலும் மற்றவர்களுக்குக் கொடுக்கிற செலவு அழிவுபோக மீதி ரூ 500 தாராளமாக இருக்கிறது. இதுதானப்பா விஷயம்" என்றுகூறி முடித்தார்.

"சபாஷ்! உனது புத்திசாலிதனத்துக்கு மெச்சினேன். ஆனால் என்னமோ அப்பா! கேட்கக் கேட்க என் உடலே சிலிர்க்கிறது. எப்படியோ நடக்கட்டும். இன்னும் என்னென்ன நடக்கப்போகிறதோ இந்த ஆட்சியில்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு வீடுவந்து சேர்ந்தேன்.

குடி-காரர்கள் தாங்கள் குடிக்கும் பழக்கத்தை அவர்களாகவே விட்டுவிட்டால் ஒழிய, திருட்டுத்தனமாக கள், சாராயம் உற்பத்தி செய்து, எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள்.

—எம். கே. காந்தி.

*   *

கள்ளு, சாராயக் கடைகள் மூடப்பட்டு விட்டாலும், திருட்டுத்தனமாய் கள்ளு, சாராயம் விற்பனையாகிக்கொண்டுதானிருக்கும்.

—எம். கே. காந்தி.

இராமாயணத்தில் ஏமாறாதே!

செய்தியும்-சிந்தனையும்.

[பொறுக்கி]

★

● மேயரின் பதவிகாலம் என்று வகுக்கப்பட்டிருக்கும் ஒரு வருஷம் மிகமிகக் குறைவானது என்று மேயர் கிருஷ்ணாராவைப் பாராட்டும்போது, டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி குறிப்பிட்டார். இரண்டு நாள் கழித்து ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரி இதை ஆதரித்து இதற்கு முனிசிபல் சட்டத்தைச் சர்க்கார் திருத்தியமைப்பார் என்று தாம் நம்புவதாகக் கூறினார்.

"செய்திகள்"

வக்கில் முன்மொழிந்து பெடரல் கோர்ட் நீதிபதி வழிமொழியும் இத்தீர்மான நாடகம் கிருஷ்ணராவ் (ஒரு ஆரியர்) மேயராவதற்கு முன்னால் நடத்தப்படாததின் காரணம், இச்சாஸ்திரிகள் இது வரை இச் சென்னையில் இல்லை என்பதா? அல்லது இப்பொழுது தான் ஞானோதயம் உண்டாகியிருக்கிறது என்பதா?

*　　　*

● மந்திரிகள் உள்பட தேசமக்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 அவுன்ஸ் உணவுப் பொருள்தான் கொடுக்கப்படுகிறது.

"காலா வேங்கடராவ்"

மந்திரிகள் கள்ள மார்க்கட்டில் வாங்கும் உணவுப் பொருள் என்ன விலை? என்று தெரிந்து கொள்ளத் தேச மக்கள் நிச்சயமாக ஆசைப்படலாம் அல்லவா?

*　　　*

● தேசியக் காவல் படை நிறுவவும், தேசம் முழுவதும் ஆயுதம் தாங்கவும், சர்க்கார் வசதி செய்ய வேண்டுமெனப் பட்டாபி சீதாராமையா அ. இ. சபையில் ஒரு பிரேரணை கொண்டு வந்தபொழுது, பிரபல காங்கரஸ் தலைவர் பிரேரணையைக் கொண்டு வந்தது குறித்து என். பி. காரே தன் களிப்பைத் தெரிவித்தார்.

"செய்தி"

"பட்டாபி தோல்வி என் தோல்வி" என்று கூறிய மகாத்மாவின் அந்தரங்க சிஷ்யர், அஹிம்சையில் கொண்டிருக்கும் அந்த ரங்க எண்ணம் எப்பேர்ப்பட்டது? என்பதைத் தெரிந்து கொண்டதினாலேயே காரே, களிப்படைந்திருப்பாரோ?

*　　　*

● இலாகா பொறுப்பற்ற மந்திரியான என். கோபால்சாமி அய்யங்கார், அகதிகளைத் துரிதமாக அழைத்துவருவதில் காட்டிய திறமையையும் அறிவையும், அகதிகள் மந்திரி நியோகி மெச்சினார்.

"செய்தி"

வந்த வந்த பிறநாட்டவர்களையெல்லாம் இந்நாட்டிற்கு அழைத்து வந்து இருக்கச் செய்த முன்னோர்களின் ரத்தமே, இன்னும் என்னுடம்பில் ஓடிக்கொண்டிருக்கின்றது என்று ஐயங்கார் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்று நம்புகிறோம்.

*　　　*

● நம்நாடு இன்னும் பல ஆண்டுகளாக நம்வரை இந்த அவதி நீடித்துக் கொண்டேதான் இருக்கும்.

"ஜவஹர்"

இப்பொழுதாவது இந்த ஞானோதயம் உண்டாகியிருப்பது,வரவேற்கத் தக்கதே.

*　　　*

● 1920 ம் வருஷத்தில் காங்கரசுக்கு எவ்வளவு மதிப்பும் செல்வாக்கும் இருந்ததோ அவ்வளவு இன்று இல்லை. நம்பிக்கை இருந்த இடத்தில் இன்று நம்பிக்கையின்மை குடி கொண்டிருக்கிறது. (தென்னிந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும்போது)

"மகாத்மா"

அறியாமை, மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் பிறந்த மதிப்பும் செல்வாக்கும், மணலில் கட்டிய கோட்டையாகும் என்பதையுணர்த்திய மாவீரர் பெரியாரை மனதில் எண்ணியே மகாத்மா இவைகளைக் கூறியிருக்கலாமல்லவா?

*　　　*

● திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், தென்காசிபோன்ற இடங்களில் ஜனங்களுக்கு 4 அவுன்ஸ் அரிசிகூடக் கிடைக்கவில்லை. அவர்கள் பட்டினியும் பசியும் கிடந்து பொறுக்க முடியாமல் நகரங்களுக்குப் போக முற்படுகின்றார்கள். சர்க்கார் அசிரத்தையாயிருந்தால் அங்கு மக்கள் மடிய நேரிடும்.

"கோசல் ராம்"

திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தென்காசி முதலிய ஊர்கள் எல்லாம் எவ்வளவு புண்ணிய க்ஷேத்திரங்கள்? அங்கு மடிந்தால் கைலாசத்திற்கோ, வைகுண்டத்திற்கோ போகலாம் எனச் சாஸ்திரங்கள் கூறுகிறதே. இங்கு மடிய வேண்டாம் என்று தடுப்பது எவ்வளவு பாபமான செயல்? என்று இராமராஜ்ஜிய மந்திரி இராஜன் பதில் கூறினால் நாம் ஆச்சரியப்படமாட்டோம்.

*　　　*

● நான் ஒரு முதலாளியல்ல என்று கூறியபோது சபையில் தமாஷ் இருந்தது. நான் என்னை சோஷலிஸ்டாகவே, கருதுகின்றேன் என்றால் மேலும் தமாஷாகக் கருதுவர்.

"ஆர். கே. சண்முகம்"

ஆறுமுகங்களில் (சண்முகங்களில்) ஒவ்வொரு முகமும் எப்படி எப்படியிருக்கிறதென்பதைப் படம் பிடித்துக் காட்டினால் நல்ல "சான்ஸ்" என்று "ஜெமினி" வாசன் நினைக்கலாமல்லவா?

*　　　*

● விடுதலைக்காக நான் எவ்விதத் தியாகமும் செய்ய வில்லையானாலும், அதற்காகத் தியாகம் செய்தவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதையும் மதிப்புமுண்டு.

"ஆர். கே சண்முகம்"

விடுதலைக்காக அல்லாது போனாலும் பதவிக்காகத் தான் இழந்து விட்ட தன்மானத்தை இவர் என் தியாகமாகக் கொள்ளவில்லையோ?

*　　　*

● குருடர்களுக்குக் கல்வியளிக்கும் திட்டமொன்றை சர்க்கார் தயாரித்துள்ளனர்.

"செய்தி"

இதைக் கண்டிப்பாய் காங்கரஸ்காரர்கள் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மதப்பெயரால் லீலைகள்.

★

கோட்டை எண்ணெயில் குளிக்கும் பெருமாள்.

நாங்குனேரி வானமாமலைப் பெருமாள் கோவிலில் ஒவ்வொரு வருஷமும் "ஜீயர்" சுவாமிகளின் ஆதரவைப்பெற்று அக்கிரமவாசிகள் ஒருகோட்டை எண்ணெயைக் கொண்டு பெருமாளைக் குளிப்பாட்டி எண்ணெய்க் காப்பு உத்சவம் நடத்தி வருகின்றார்களாம்.

இந்த வருஷத்தில் இந்த உத்சவத்தை நடத்துவதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதற்கென்று ஒரு நாளைக் குறிப்பிட்டிருந்தார்களாம். கமிட்டியார் குறிப்பிட்டிருந்த நாளுக்கு முன்னாலேயே "ஜீயர்" சுவாமி சிலரைத் தூண்டிப் பெருமாளை எண்ணெய் தேய்த்து குளிக்க ஏற்பாடு செய்துவிட்டாராம். கமிட்டியார் மூக்கு அறுபட்டு தேவஸ்தானப் போர்டில் முறையிட்டார்களாம். இன்னொரு முறையும் சாமி எண்ணெய் தேய்த்துக் குளிக்கட்டும் என்று, கமிட்டியினருக்குப் போர்டார் அருள்கூர்ந்து சொல்லி, தர்மகருத்தாவுக்கு உத்தரவும் போட்டார்களாம். (பெருமாளுக்கு ஜலதோஷம் வந்துவிடுமென்றுபயந்து) தருமகர்த்தா இந்த உத்தரவை நிறுத்திவிட்டாராம். கமிஷனர் அதன்பின் நேரே வந்து பார்த்து, பெருமாள் இரண்டாவது முறை குளிக்கவில்லை என்று போர்டாருக்கும் புகார் செய்து, மற்றொரு நாளைக் குறிப்பிட்டுக் கமிட்டியார் குளிப்பாட்டலாமென்று மறுபடியும்தருமகருத்தாவுக்குத் தெரிவித்தாராம். அந்தத் தரும கருத்தா அதையும் ஆட்சேபனை செய்திருக்கிறாராம்.

இந்த நாட்டில் எத்தனை குழந்தைகள் எண்ணெய்ப் பசையே காணாமல் பறட்டைத் தலையுடன் விளங்குகின்றன. அவைகளைப் போக்க ஒரு மார்க்கமுமில்லை. இந்தக் குழவிக் கல்லின் பேராலே (பட்டணம்படி) 112படி எண்ணெயைப் பாழாக்குவதிலே போட்டாபோட்டி. இதற்குச் சர்க்கார் ஒத்துழைப்பு.

★

சரவணப் பொய்கையை ரிப்பேர் செய்ய முப்பதினாயிரம்.

கோடம்பாக்கம் வடபழனியின் சரவணப் பொய்கையை "ரிப்பேர்" செய்வதற்காக நடத்திய உதவிக் கச்சேரிகள்மூலம் செலவுபோக இருப்பு இருக்கும் 29,770-1-6 ரூபாயை "கோயில் பக்தர்கள் சங்கத் தலைவரிடம்" கொடுக்க முடிவு செய்திருக்கிறார்களாம்.

சரவணப் பொய்கை கந்தன் தவழ்ந்து திரிந்த இடம் என்பார்கள். இந்தப் பொய்கையை "ரிப்பேர்" செய்யத்தான் இந்த முப்பதினாயிரமாம். இது போதாமல் இன்னும் வெவ்வேறு வகைகளில் வசூலாகலாம். இந்தச் சரவணப் பொய்கை இன்னும் எத்தனை அநாமதேயக் குழந்தைகள் தவழ்ந்துதிரிய இடம் கொடுக்குமோ? அல்லது எத்தனை அநாமதேயக் குழந்தைகளைச் சாகடித்து ஜன்ம சாபல்லியமாக்குமோ? வேறு எதற்குப் பயன்படப் போகிறது இந்தப் பாசிபிடித்த தண்ணீர்?

★

தப்புத் தண்டா செய்யலாம்! சாமியார் வேஷம் போடலாம்!

சென்னை ரகசிய போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நாராயணதாஸ், கடலூர் போலீஸ் கான்ஸ்டெபில் சின்னத்தம்பியுடன் சென்று வடலூர் இராமலிங்கசுவாமி மடத்தில், சாமியார் வேஷம் போட்டுத் தலைமறைவாயிருந்த ஒருவரை, பத்து ரூபாய் நோட்டு வழக்குச் சம்பந்தமாகக் கைது செய்து ரிமாண்டுக்கு அனுப்பினாராம்.

அங்கிருக்கும் மற்ற சாமியார்கள் வேஷம் எப்பொழுது கலையுமோ? நாமறியோம் பராபரமே என்கிறார் ஒரு தோழர்.

★

கார்த்திகை தீபம் போகலாம் கள்ளக்காதலைப் பெருக்கலாம்.

ஒரு பெண் தன் புருஷன் விட்டில் இருந்து கார்த்திகை தீபம், பெயரைச் சொல்லித் தேவிகாபுரம் வந்து, அங்கு ஒரு கள்ளப்புருஷனிடம் நட்புக்கொண்டு அந்த கார்த்திகை தீபம் தந்த புதுப் புருஷனோடு ஒருவீட்டில் படுத்துறங்க, இந்தப் புது ஜோடியைக் கண்டு பொறாமை கொண்ட ஒருவன் கதவைத் தாளிட்டுக்கொண்டு போய்விட, காதலர் கதவைத் திறக்க முயன்றும் முடியாமல் போகவே, அந்தவீட்டிலுள்ள ஒரு அறையில் தூக்கிட்டுக்கொண்டு கார்த்திகை தீப ஜோதியில் கலந்துவிட்டார்களாம்.

கார்த்திகைதீபம் இப்படியும் ஒரு வகையில் பயன்படுகின்றது. இவர்களுக்கு நமது ஆழ்ந்த அநுதாபம் உரியதாகுக.

★

மழையை வருவிக்க மார்க்கம்

பண்டாரச் சன்னதி விஞ்ஞானி.

தஞ்சை ஜில்லாவில் மழையில்லாமல், உழவன் கண்ணீர் சிந்துகிறான். பயிர்களோ கருகி வாடுகின்றன. இந்த வேளையில் ஆச்சரியமான விஞ்ஞானி அபூர்வமான யோசனையை வழங்கி, அருமையான வழியில் அரைப் பைசாகூட செலவில்லாமல் மழையை வருவிக்கச் செயல் புரிந்து வருகின்றார்.

இந்த விஞ்ஞானி வேறு யாருமல்லர். பாரதிமணி மண்டபத்திற்கு, வெளிச்சம் போடுவதற்காக வெள்ளிக் குத்து விளக்குக் கொடுத்த திருவாவடுதுறை ஆதீனத்து அம்பலவாண தேசிகர் என்ற பண்டாரச் சன்னதியே யாவர். இவர் கூறும் மார்க்கம், நமசிவாய குருமூர்த்தி என்ற, காலஞ் சென்ற முதல் பண்டாரத்தின் திருச்சன்னதியில் "மேகராகக்குறிஞ்சி" என்ற பண்ணில் உள்ள தேவாரத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டும் என்பதாகும். மழையை வருவிக்கும் இந்த முறை பதினைந்து நாளைக்குமுன் தொடங்கப்பட்டு நடந்து வருகிறதாம்; மடம் என்ற காரணத்தால்.

மக்கள் இம்முறையை எங்கு நம்பாமல் போய் விடுகிறார்களோ என்று நினைத்து இதன் பெருமைக்கும், பழமைக்கும் ஆக, ஒரு விளக்கம் கூறப்படுகின்றது.

பழைய நமசிவாயம் என்ற பண்டாரம், பல நூற்றாண்டுகளுக்கு

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

குடி அரசு

6—12—47 சனிக்கிழமை.

"அய்யய்யோ கண்ட்ரோலை எடுக்கப்போகிறார்களாமே"

★

கண்ட்ரோலுக்கு நாணயக்குறைவும், லஞ்சக் கொள்ளையும், கள்ள மார்க்கட்டும் எவராலும் மறுக்க முடியாதபடி, வேறு எந்தச் சர்க்காரிலும் நடக்க முடியாத அளவுக்கு நடந்து, நாடெங்கும் வெளியாகிச் சர்க்கார் நிலை சிரிப்புக்கு இடமாகி நாற்றமெடுத்தவுடன், இப்பொழுதுதான் விஷயம் தெரிந்து கொண்டவர்கள் போலச் சர்க்கார் நடித்துக் கண்ட்ரோலை எடுப்பதுபற்றி யோசிக்கப் போவதாகச் சேதி வெளியாக்கிக் கொண்டு வருகிறார்கள். இதற்கும் காரணம், சர்க்காருக்கே புத்தி வந்து தாங்களாக எடுக்கப்போவதாகக் காட்டாமல், காந்தியார் சொல்லி விட்டதற்கு ஆக நிலைமையைப் பரிசிலனை செய்து, எடுக்கப் போவதாகக் கூறி வருகிறார்கள்.

இனிப் பரிசிலனை செய்வதற்கு என்று சில மாதம் தாட்டுவார்கள். பிறகு ஒரு ஒரு மாகாணத்திற்கு அனுமதி கொடுக்கப்படும் என்னும் சாக்கில், சில நாள் தாட்டுவார்கள். பிறகு ஒவ்வொரு ஜில்லாவாக ஒழிக்கப்போகிறோம் என்பதாகச் சில நாள் தாட்டுவார்கள். இப்படியே செய்து வந்து கண்ட்ரோல் சாமான்கள் கண்ட்ரோல் விலையை விடக் குறைந்த விலைக்குக் "கள்ள மார்க்கட்டில்" விற்கும் நிலைமை ஏற்பட்டவுடன், கண்ட்ரோல் லைசென்சுதார், பர்மிட்தார் மாமூல் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லாமல் போன பிறகு, கண்ட்ரோல் சிப்பந்திகளுக்குச் செய்வதற்கு அங்கு வேலை இல்லாமல் போன பிறகு கண்ட்ரோலை எடுப்பார்கள்.

இதுதான் நம்ம ராஜ்ஜியம் என்னும் சுயராஜ்ஜியத்தில் நடக்கும் காரியமாய் இருந்து வருகிறது.

ஏனெனில், கண்ட்ரோல் சிப்பந்திகள் அத்தனை பேரும், தேசத்துக்கு ஆகத் தியாகம் செய்த, தியாகப் பிரம்மங்களும், அதுகளுடைய அண்ணன் தம்பியும், மாமன் மச்சினனும், பிள்ளை குட்டிகளும், கொடுத்தான் கொண்டான்களுமேயாவார்கள். இது மாத்திரமா?

கண்ட்ரோல் சாமான்கள் சப்ளையர்களும் ரேஷன் லைசென்சுக்காரர்களும், பர்மிட்காரர்களும் சவுக்கிகளும் உட்பட ஏறக்குறைய எல்லோருமே, அப்படிப்பட்டவர்களும், ஆகஸ்ட்டுத் தியாகிகளும், அக்டோபர் வீரர்களுமே ஆவார்கள்.

பொதுவாக மந்திரிகள் தவிர, சட்டசபை மெம்பர்கள் தவிர, மற்ற காங்கரஸ் தேசபக்தர்கள், அவர்கள் சுற்றத்தார்கள், அவர்களை ஆதரிக்கும் ஆதரவாளர்கள் யாவருமே, இன்று கண்ட்ரோல் என்னும் அக்ஷய பாத்திரத்தின் மூலமே மனிதர்களாக, ஜீவன்களாக வாழ்ந்து வருகிறார்கள். எனவே காங்கரஸ்காரர்களுக்கு, இப்படிப்பட்ட காமதேனு கற்பக விருட்சம் என்று சொல்லும்படியாக இருந்துவரும் கண்ட்ரோலை எடுத்து விடுவது என்றால், காங்கரஸ் தியாகிகளும், காங்கரஸ் சர்க்கார் சிப்பந்திகளும், காதில் கேட்ட மாத்திரத்திலேயே அய்யய்யோ கண்ட்ரோலை எடுத்து விடுகிறார்களாமே, இனி எப்படி நம் பிழைப்பு நடக்கும்? என்று ஏங்கித் தவித்து வயிற்றிலடித்துக் கொண்டு அழமாட்டார்களா? இப்போது எங்கும் இதே கூக்குரலும் அழுகையுமாகவே இருந்து வருகிறது. ஆகையால்தான், சர்க்கார் நிலைமை வெகு நெருக்கடியாக இருந்து வருகிறது என்னலாம்.

கண்ட்ரோல் சிப்பந்திகளுடைய எண்ணிக்கையும், அவர்களுக்குக் கொடுத்துவரும் சம்பளமும், கண்ட்ரோல் தவிர்த்த வேறு எந்த இலாகாச் சிப்பந்திகளின் எண்ணிக்கையைவிட, அவர்கள் பெறும் சம்பளத்தைவிட, மேம்பட்ட அளவென்றே சொல்லலாம். இது அவ்வளவும் பொது மக்கள் வரிப்பணமேயாகும். இந்தக் கூட்டத்தார் பெறும் மாமூல் என்னும் சலுகைக் கூலி லஞ்சம், இந்தச் சம்பளத் தொகையைவிட 4, 5 பங்கு அதிகமாகவே இருக்கும்.

உதாரணமாக ஒரு சவுக்கிதாரனுக்குச் சம்பளம் மாதம் 30 ரூபாய் என்று இருந்தால், அவனுக்கு ஒரு மாதம் 150 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை, அதாவது தினம் ஒன்றுக்கு 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை மக்கள் கட்டாயப்படுத்திக் காணிக்கையாகக் கொடுத்துக் கைகூப்பிவிட்டுப் போகிறார்கள். காரணம், முதலாவது பிரயாணிகள் தங்களைச் சோதனை போடுவதில் தாமதம் இல்லாமல், தொல்லை இல்லாமல் மூட்டை முடிச்சுகளை அவிழ்த்து அலங்கோலப்படுத்தாமல் விட்டால் போதும் என்பதற்கு ஆக, பிறகு வேறுபல சங்கதிகளுக்கு ஆக, சிலர் மாமூலாக வெளியிலிருந்து சாமான் கொண்டுவந்து விற்றுவிட்டுப் போகவும், சிலர் உள்ளே இருந்து சாமான் வாங்கிக்கொண்டுபோய் வெளியே விற்றுவிட்டு வரவுமாகவும், சிலர் இந்தப்படி தினம் 4, 5 தடவை வந்துவிட்டுப் போக மாதம் இவ்வளவென்று மொத்தமாகப் பேசிக்கொள்ளவும், இப்படியாகப் பல காரணங்களால் மாதம் 300 ரூபாய் கிடைப்பது அதிகமாகிவிடாது;

இது தவிர கிராமாதிகாரிகள், தாசில்தார், ரேஷன், சப்ளை ஆபீசு உள் சிப்பந்திகள் வெளிச் சிப்பந்திகள் இவர்கள் தயவுக்கு, மக்கள் அலைந்து திரிந்து அலைமோதிக்கொண்டு வந்து, வலியக் கொடுத்து அதிகாரிகளைப் பெற்றுக்கொள்ளும்படி தொந்தரவு செய்யும் காரியம் ஆகியவைகளால்

சில அதிகாரிகளின் ஒரு வருஷத்தியச் சம்பளம் ஒரு மாதத்தில் கிடைத்துவிடும்படியாக ஆகிவிடுகிறது.

மேல் அதிகாரிகள் சங்கதி சொல்லவே வேண்டியதில்லை. மாகாண அதிகாரிகள் சங்கதி எண்ணவே வேண்டியதில்லை. மந்திரிகள் சங்கதி மதிக்கவே வேண்டியதில்லை. இப்படிப்பட்ட கண்ட்ரோல் எடுபடுவதென்றால் வந்த சுயராஜ்யம் போவதைவிடப் பெரியதொரு சங்கடமான காரியமாய் இருக்காதா? தேசபக்தர்களுக்கும் தேசியத் தியாகிகளுக்கும் என்று நாம் மிகவும் துயரமுறுகிறோம்.

எத்தனையோ சாதாரணத் தோழர்கள், இந்தக் கண்ட்ரோலின் பயனாய்க் குறிப்பிடத் தகுந்த கனவான்களாய் வாழ்கிறார்கள். எத்தனையோ அனாமதேயத் தோழர்கள், இந்தக் கண்ட்ரோலின் பயனாய் மிகமிக மதிக்கத்தக்க கனவான்களாய் வாழுகிறார்கள். இப்படிப்பட்ட கண்ட்ரோல் ஒழிவது மிகவும் பரிதாபகரமானதுதான்; ஆனால் ஒழிவது லேசல்ல என்றுதான் சொல்லுவோம்.

கண்ட்ரோல் எடுக்கப்பட்டு விட்டால், பொது மக்களுக்குப் பெரிய அனர்த்தம் ஏற்பட்டு விடும், ஆபத்தாய் முடிந்துவிடும் என்பது கண்ட்ரோல் கொள்ளையில் சம்மந்தப்படாத ஒரு கூட்டத்தாரின் கூக்குரல். இது நியாயமாய்க் கருதுகின்ற கூக்குரலாகவே இருக்கலாம். கண்ட்ரோலால் வசதி பெறுகின்றவர்கள், கண்ட்ரோலில் சம்பந்தப்பட்ட சிப்பந்தி வகையராக்கள் போகப், பொது மக்களில் 100க்கு 5 அல்லது 10 பேர்களே ஆவார்கள். அதாவது பார்ப்பனர்கள் அத்தனை பேரும் நலமடைகிறார்கள். அவர்கள் தவிர்த்த மற்றவர்களில் சற்று அதிகார தோரணை, சிபார்சு, செல்வாக்கு, கண்டாமுண்டித்தனம் (கெட்டிக்காரத்தனம்) கொண்டவர்கள் அதுவும், பெரிய நகரங்களில் உள்ளவர்கள் என்கின்ற தலைப்பில் வரக்கூடிய மக்கள் என்பவர்கள், (இவர்கள் பொது மக்களில்) 100க்கு 5 பேர் அல்லது 10 பேர்கள் ஆகியவர்கள் மாத்திரமே கண்ட்ரோலால்சவுக்கியமடைகிறவர்களாக இருக்கலாம், மற்றப்படி எல்லா மக்களுமே கண்ட்ரோலால் பணமிருந்தும், பண்டம் கிடைக்கப்பெறாத பாவிகளாகவே இருந்து வருகிறார்கள்.

உதாரணமாக, அனேக சாதாரணத் தகுதி உடையவர்கள் வீட்டில் மல்லிகைப்பூப்போன்ற சாதம் பிச்சைக்காரனுக்கு வழங்கப்படுவதையும், அனேக உயர்ந்த தகுதியுடைய யோக்கியர்கள் வீட்டில் ரோஜாப் பூப்போன்ற சாதம் (மட்டை சிகப்பு கொட்டாப்புடி அரிசிச்சாதம்) தங்கள் வீட்டிற்கே போதுமானதாக இல்லாத அளவுக்கு, அழுதுகொண்டு சாப்பிடுவதையும் பார்த்து வருகிறோம்.

மற்றும் இந்தக் கண்ட்ரோலால் விளைவித்தவனுக்கு குறைந்த விலைதான் கைக்குவந்து சேருகிறது. குறுக்கே இருப்பவனுக்கும், தரகனுக்கும், சர்க்கார் சிப்பந்திகளுக்கும் அதுபோன்ற (விளைவித்துப் பாடுபட்டவனுக்குக் கிடைப்பது போன்ற) சரிவிவில அளவு கிடைக்கிறது. வாங்கி உண்பவனுக்கு ஒன்றுக்கு இரண்டு, ஒன்றுக்கு மூன்றுவீதம் கொடுக்க நேரிடுகிறது. பாட்டாளி, தொழிலாளியாய் இருப்பவர்கள் கள்ள மார்க்கட் விலை கொடுத்தே உணவுத் தானியம் வாங்கவேண்டி இருக்கிறது. அவன் (தொழிலாளி) அந்தக் கணக்குப் பார்த்தே கூலி கேட்கிறான். கண்ட்ரோல் விலைக்கு விற்கும் மிராசுதாரனுக்கு, அவ்வளவு கூலி கொடுக்கக் கட்டுவதில்லை. மிராசுதாரன் கலப்பைக் கொளுவு, எரு முதல் எல்லா விவசாயப் பண்டங்களையும் கள்ளமார்க்கட்டில் வாங்கித் தீரவேண்டி இருக்கிறது. கிசான் தகராறு வேறு, அவன் உயிரை வாங்குகிறது. இந்த நிலையில் பயிரிட்டுத் தானியமாக்கியவனை, நீ இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று ஆக்கினை இட்டால், அவன் புரட்டுச் செய்

சுயமரியாதை இயக்கம் கூறுவது என்ன ?

★

1. மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு, தாழ்வும் இருக்கக்கூடாது.
2. மனித சமூகம் பொருளாதாரத் தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன், ஏழை என்கின்ற வித்தியாசமில்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும்.
3. மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்யாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்க வேண்டும்.
4. மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக நேய, ஒருமையே நிலவவேண்டும்.
5. உலகில் உழைப்பாளி என்றும், முதலாளி என்றும் பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும், சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்கவேண்டும்.
6. ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும், எவ்விதத்தும், அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, உணர்ச்சி, காட்சி ஆகியவைகளுக்கு இணங்கி நடக்கச் சர்வ சுதந்தரமும் இருக்கவேண்டும்.

சமஸ்கிருத ராஜாங்கக் கவி.

[தெள்ளுமணி]

★

நமது சென்னை சர்க்கார், தென்னிந்திய பாஷைகளுக்கு ஆக்கமளிக்கும் ஒரு புதுத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தேசியப் பத்திரிக்கைகள் விளம்பரஞ் செய்திருக்கின்றன.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய ஐந்து தென்னிந்திய மொழிகளிலும் ராஜாங்கக் கவிகளை நியமிக்கச் சர்க்கார் முடிவு செய்திருக்கின்றார் என்பதைத்தான் தென்னிந்திய பாஷைகளுக்கு ஆக்கமளிக்கும் திட்டம் என்று பத்திரிக்கைகள் வருணிக்கின்றன.

அரசர்கள் திருமாலின் அம்சங்கள் என்ற நம்பிக்கையைப் பரப்பிய காலத்தில் அந்த அரசனுடைய பெருமைகளைப் பற்றிக் கவிபாடி முடியரசை நிலைநாட்டி- வருவதற்கே உண்மையில் ராஜாங்கக் கவிகள், பழைய ராஜாக்கள் காலத்தில் பயன் பட்டு வந்திருக்கின்றார்கள் என்று பார்க்கின்றோம். தப்பித்தவறி வேறு வகையில் பொதுமக்களுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றார்களா என்று பார்த்தால் அந்தாதி, உலா, என்று பாடி ஆண் பெண்கள் ஒழுக்கத்தைக் குலைப்பதற்கே பயன்பட்டிருக்கிறார்கள் என்று காணலாம். (இங்கு சங்ககாலப் புலவர்களை நாம் குறிப்பிடவில்லை) இத்தகைய போக்கில் தான் இந்த ராஜாங்கக் கவிகள் இருக்கப் போகின்றார்களோ? அல்லது வேறு வகையில் பொதுமக்களுக்குப் பயன்படப் போகின்றார்களோ? அதாவது இவர்களுக்கு பாடலுக்குரிய பொருள், கவர்னர், மந்திரிகளென்ற வரிசையில் இருக்கப்போகின்றதா? அல்லது பாட்டாளி தொழிலாளி என்ற வரிசையில் இருக்கப் போகின்றதா? இதைப் பிறகு பார்ப்போம்.

இந்தத் திட்டத்தில் பயனிருக்கிறதா? இல்லையா என்பதுகூடமுக்கியமில்லை. ஆனால் தீமை தராமல் இல்லையே? என்பதையும் சர்க்காருடைய நியாயமற்ற, கோழைத்தனமான அல்லது வஞ்சகமான போக்கையுமே காட்டுகின்றது என்பதையும் இங்கு எடுத்துக்கூற வேண்டுமென்றும் ஆசைப் படுகின்றேன்.

சர்க்கார் சென்னை மாகாணத்தில் உள்ள மொழிகளைக் குறிப்பிடும்போது இரண்டு வகையில் குறிப்பிட்டு வந்திருக்கின்றார்கள். தாய்மொழி என்பது ஒருவகை. பிரதேச பாஷை என்பது மற்றொருவகை. இந்த இரண்டு வகையில் இப்பொழுது குறிப்பிட்டிருக்கும் ஐந்து தென்னிந்திய மொழிகளை எந்த வகையில் அடக்கலாம்? இதை நியாயமான போக்குடைய சர்க்கார் விளக்க வேண்டுமல்லவா? சமஸ்கிருதம் யாருக்குத் தாய் மொழி? எந்தப் பிரதேசப் பாஷை? இதைத் திட்டங் கொண்டு வந்த ஆள வந்தவர்கள் ஏன்கூறவில்லை?

எந்தப் பார்ப்பனனும் தனக்குத் தாய் மொழி "சமஸ்கிருதம்" என்று இந்தக் காலத்தில் துணிந்து கூறமாட்டான் என்றே நாம்—பொதுமக்கள் - நினைக்கின்றோம். பார்ப்பான் கூறாதபோது மற்ற எவனுமே தனக்குத் தாய்மொழி என்று சம்ஸ்கிருதத்தைக் கூற மாட்டான். ஆகவே யாருக்கும் சமஸ்கிருதம் தாய்மொழி என்ற நிலையில் இல்லை.

சென்னை மாகாணத்தின் எந்தப் பிரதேசத்திலும், சம்ஸ்கிருதம் மக்களுக்கிடையே வழங்குவதையும் யாரும் பார்த்ததுமில்லை. கோயில் கர்ப்பக்கிருகத்துக்குள்ளே, தெய்வீகம் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படும் கல் செம்புக்கு முன்னாலே, பார்ப்பனர் என்பவர்களில் ஒரு சிறு கூட்டமட்டும் இந்த மொழியை, அதாவது "இன்னார் உனக்கு இந்தப் பொருள்களையெல்லாம் தந்திருக்கின்றார் ஆதலால் நீர் அவருக்கு இந்தக் குறைகளையெல்லாம் நீக்கி வைக்க வேண்டும்" என்று வழக்கமாக ஒரே முறையில் (அவர்கள் சொல்லுகிற அர்த்தத்தின்படி) கூறிவருகின்றார்கள்- ஒரு சின்ன இடத்தில் ஒரு மனிதன் ஒரு கல்லுக்கும் செம்புக்கும் முன்னால் அர்த்தம் தெரிந்தோ தெரியாமலோ உளறிக் கொண்டு வரும் ஒரு மொழிக்கு, இந்தக் காலத்தில் ராஜாங்கக்கவி ஏற்படுத்திப் பெருமை தருகின்றோம் என்றால் ஏதாவது அர்த்த முண்டா? பொதுமக்களுக்குப் பயனுண்டா?

மொழியின் பெயரால் அந்தந்த மொழியிலே நன்றாகத் தேர்ந்த புலமை நிறைந்த கவிஞருக்குப் பொருள் கொடுத்து ஊக்கி வரும்போது, அதாவது பார்ப்பனரல்லாத மற்றைய அறிஞர்கள் நால்வருக்குப் பொருள் கொடுக்கும் போது, ஒரு பார்ப்பானுக்கும் இந்த முறையில் பணம் கொடுத்து வரவேண்டும் என்பதற்காகவே தான் தென்னிந்திய மொழிகளுள் ஒன்றாகச் சமஸ்கிருதத்தையும் சேர்த்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்

யாமல், பண்டம் திருடாமல் எப்படி இருக்கமுடியும்?

மற்றும், இதில் எழுதக்கூடாத பல வழிகளையும் மனதில் கொண்டு பார்ப்போமானால், கண்ட்ரோலைப்பற்றிக் கருத்துக் கூற வேண்டுமானால், கண்ட்ரோல் சாதாரண மட்டரக மூளையுள்ள அசட்டு மக்களையும், மகா கெட்டிக்காரத்தனமாய் அயோக்கியத்தனம், பித்தலாட்டம், நாணயக்குறைவு, மோசடி ஆகிய காரியங்களைக் கற்றுக்கொள்ளச் செய்யும் ஒரு "ஆர்ட் காலேஜ்" என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படிப்பட்ட கண்ட்ரோல் ஒழிந்தால் ஒரு அளவுக்கு மக்களுக்குக் கஷ்டம் என்று சொல்லப்பட்டாலும், சராசரி கணக்குப் பார்த்தால் மக்களுக்கு நன்மை, லாபம், தொல்லைக்குறைவு என்பதோடு, மக்களின் பொது நாணயம் ஒழுக்கம் ஆகியவை இன்னும் மோசமாய்ப் போய்விடாமல் காப்பற்றப்படவும், இனிவரும் சந்ததிகளில் 100க்கு 5பேராவது யோக்யராக இருக்கவும் உதவியாக இருக்கலாம் என்றே கருதுகிறோம்.

தையே போற்றுகிறார்கள் என்று மற்றவர்கள் கூறி, பார்ப்பனர்களுக்குத்தமிழோ தெலுங்கோ தாய்மொழியாக இருக்க முடியாது என்று கூறி வந்தபோதெல்லாம் பார்ப்பனர்கள் மறுத்து வந்திருக்கின்றார்கள். இப்பொழுது பார்ப்பனர்கள் இதை எந்த முறையில் ஒப்புக்கொள்ளுவார்களோ? நாம் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால் என்றைக்குமே பேச்சு வழக்கத்தில் இல்லாத ஒரு கூட்டத்தை - திராவிட மொழிகளின் சிறப்பை அழித்துத்திராவிட மக்களின் மானத்தையும் சூறையாடுவதற்குக் கருவியாயிருந்து, வந்திருக்கும் ஒருமொழி என்று வாயளவில் சொல்லப்படுகின்ற சமஸ்கிருதச் சொற்கூட்டத்தை - இன்னும் மக்கள் பெருமையாகவே கருத வேண்டும்; தேவபாஷையாகவே மதிக்க வேண்டும் என்று சர்க்கார் நினைக்கலாமா?

மந்திரிகள் - இன்று திராவிடர்களாயிருப்பதால் அத்தனை பேரும் அழிந்தொழிய வேண்டும் என்று பார்ப்பனர்கள் தவளைக் கத்துக் கத்தி வாழ்த்துகிறோம் என்று கூறினால் கூட, முதலாவது நம் மந்திரிகளுக்கு அதைப் புரிந்து கொள்ள முடியுமா? மந்திரிகளுக்கு இந்த குருட்டு யோசனை ஏனோ?

கோவிலிலும் கூட தமிழிலேயே- திராவிட மொழிகளிலேயே எல்லாம் நடக்க வேண்டும் என்று சட்டம் செய்ய வேண்டிய நேரத்தில், அந்தச் சட்டத்தைச் செய்வதற்கு ஆண்மை இல்லாது போனாலும், இந்தச்சட்டத்தை— இந்த அமைப்பை ஏன் உண்டாக்கவேண்டும்? இதைச் சர்க்கார்—நமது திராவிட மந்திரிகளான சூத்திரர்களான கனவான்கள்—யாரோ சொன்னார்கள் என்கிற தாட்சணியத்திற்காக நுழைத்திருக்கும் இந்த சமஸ்கிருத ராஜாங்கக் கவி ஏற்பாட்டைக் கைவிட வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லுகின்றேன். மற்றைய திராவிட மொழிகளையும், பரிகாசம் செய்வது போன்ற ஏற்பாடாகும் என்றும் சொல்லுகின்றேன்? இது சர்க்கார் காதில் ஏறுமா? இல்லையென்றால் பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டுதான் நாங்கள் வாழ முடிகிறது? அவர்களுக்கு இம்மாதிரியான ஒரு ஏற்பாட்டைச் செய்யாவிட்டால் எங்களைக் கவிழ்த்து விடுவார்கள் என்கிற கோழைத்தனத்தால் பேசாமல் இருந்து விடுவார்களா? எப்படியும் இது ஒரு வஞ்சகமான செயல் என்பதையும், திராவிடர்களுக்குத் தீமை தரும் ஒரு வழியை நிலைநாட்டி அதைக்கௌரவப்படுத்திச் செல்வாக்கடையச் செய்யவேஉழைக்கின்றோம் என்பதையும் சர்க்கார்—குறிப்பாக நம் திராவிட மந்திரிகள் உணருவார்களாக.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னால், பாண்டிய நாட்டில் பல்லக்குச் சவாரி செய்து சுற்றி வரும்போது இராமநாதபுரம் வந்தாராம். பன்னிரண்டு வருஷமாக அந்த ஜில்லாவில் மழையே இல்லாமல், பஞ்சமுண்டாகிப் பூசை முதலான புனிதமான காரியங்களுக்கும் கூடத் தண்ணீர்த்தட்டு ஏற்பட்டதாம். பண்டாரம் பார்த்து மனம் பரிதவித்து, அப்படியே பூசையில் உட்கார்ந்து தன் சிஷ்ய கோடிகளை மேகராகக் குறிஞ்சித் தேவாரத்தைக் கத்திச் சொல்லும்படி கட்டளை போட்டாராம். உடனே கரை புரண்ட வெள்ளமாகப் பெரு மழை பெய்தது என்பதை, மடத்து நூல்களிலிருந்து ஆராய்ச்சி பண்ணிக் கண்டு பிடித்தார்களாம்.

கும்பகோணத்து "லோக குரு" என்ற பார்ப்பன விஞ்ஞானி, மழையை வருவிக்க விராட பருவம் படிக்கச் செய்து, வருண ஜபம் செய்யச் சொன்னார் என்று சமீபத்தில் வந்த செய்தியையும், பண்டாரம் என்கின்ற பார்ப்பனரல்லாத இந்த விஞ்ஞானி, அந்த வருண ஜபத்திற்குப் போட்டியாகக் கண்டு பிடித்திருக்கின்ற இந்தக் கண்டு பிடிப்புச் செய்தியையும் சேர்த்து நினைத்துப் பார்க்கும் போது இந்த இரண்டு ஆசாமிகளும் ஒருவர்க்கொருவர் சளைத்தவர்களில்லை என்ற முடிவிற்கே திராவிடர்கள் வர முடியும்.

இனி மேல் மழை பெய்தால், அது காலங்கடந்து பெய்கிற மழையேயாகும். அது பயனில்லை. அப்படிப் பயனில்லாத மழை பெய்தால், "என்னால்தான் மழை பெய்தது" என்று இரண்டு பேரும் சொல்லிக் கொள்ளலாம். பெய்யாவிட்டால் "கலி காலமல்ல" என்று இரண்டு பேரும் அழுது ஆறுதலும் பெறலாம்.

வெளி நாடுகள் எல்லாம் விஞ்ஞான முதிர்ச்சியால், நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில், நினைத்த அளவு மழையைத் தருவிக்க மார்க்கங்கூறி, மழையைப் பெய்ய வைத்தும் காட்டுகின்றார்கள். இங்கே குருவும் பண்டாரமும், பாட்டாளி மக்களின் அறியாமையிலே கட்டியிருக்கும் மதத்தின் பெயர்களால் இந்தப் பித்தலாட்ட வேலையிலே துணிந்து இறங்குகின்றார்கள்.

மக்கள் ஆட்சி நடப்பதாயிருந்தால் இந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை நடத்திக்காட்டச்செய்து பரிசோதனை பார்க்கவேண்டும். உண்மையாயிருந்தால் உலக மெங்கும் பரப்ப வேண்டும். பித்தலாட்டமாயிருந்தால் இந்த மத லீலைகளுக்கு இங்கு இடமில்லைஎன்று கூறி உடனே இந்த உலகத்திலிருந்தே வெளியேற்ற வேண்டும். இது நடக்குமா?

எழுத்தாளர்களுக்கு!

● கட்டுரை எழுதுவோர், சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒருபக்கத்திலேயே எழுதியனுப்ப வேண்டும் என்பதை நினைப்பூட்டுகின்றோம்.

● கதை என்றவுடன், பொழுது போக்குக்குக் கூடத் தகுதியில்லாத திராவிட இனத்திற்குத் தேவையில்லாதவைகளைக் கதை என்ற பெயருடன் சிலர் அனுப்பியிருக்கின்றனர். திராவிட இனத்திலுள்ள மாசுகளை உணரச் செய்யும் வகையில், எழுதியனுப்பப்படும் கதைகளே வெளிப்படுத்தப்படும் ஆதலால், அந்த முறையில் எழுதிவர வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

● பெண்கள் பகுதி பெண்களாலேயே எழுதியனுப்பப்படுவதுதான் நல்லது. போதிய அளவு பெண்கள் சிரத்தை காட்டவில்லை என்பதைத் தாய்மார்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

சினிமா—நாடக விமர்சனம்.

நமது நோக்கம்.

நாடகக் கம்பெனிச் சொந்தக்காரர்கள், சினிமாப்பட முதலாளிகள் ஆகியவர்கள் வியாபார ரீதியில் முதலீடு வைத்துத் தொழில் நடத்திவருவதால் அவர்களுக்கு எந்த நாடகம் நடத்தினால்—எந்தக் கதையை சினிமாப் பிடித்தால் லாபகரமாக இருக்கும் என்பதில்தான் கவலையிருக்க முடியுமேயல்லாது நாடகம்—சினிமா பார்க்கிறவர்களின் அறிவு வளர்ச்சிக்கோ—முன்னேற்றத்துக்கோ பயன்படும்படியான காரியங்களை ஒடி முதலாளிகள் செய்வார்களென்று நாம் எதிர்பார்க்கவே முடியாது. எனவே தான், சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள் முதல் நமது கொள்கைகளை பிரசார மூலமாக நடத்தி வந்ததோடு நம்மவர்களைக் கொண்டே நாடகம் புதிய முறையில் தயாரித்து அவைகளை நம் தோழர்களே பல இடங்களில் நடித்துமிருக்கிறார்கள். அவைகளில் மிக முக்கியமாக எடுத்துக் கூறவேண்டுமானால் நமது கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய ‘இரண்யன் அல்லது இணையற்ற வீரன்’’ என்ற நாடகத்தைப் பல ஊர்களில் நமது தலைவர் பெரியார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டுவந்திருக்கிறது. அது போலவே தோழர் அண்ணாதுரை அவர்களால் எழுதப்பட்ட "சந்திரோதயம்'', "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்'', "நீதிதேவன் மயக்கம்'' முதலான நாடகங்களை அவரும், அவரது தோழர்களுமாகவே வேஷம் போட்டுப் பல ஊர்களில் யாரும் எதிர்பாராத அளவுக்கு வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இன்னும் இது போலவே ஆங்காங்கு உள்ள நமது தோழர்கள் சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்ட நாடகங்களை நடத்தி வரவும், அவைகளுக்கு ஏரானமான மக்கள் வந்து பார்த்து ரசிக்கவுமான நிலை ஏற்பட்டு விட்டது.

இன்னும் சற்று உண்மையை வெளிப்படையாகவே சொல்ல வேண்டுமானால் முன்பெல்லாம் நாடகம்—சினிமா என்றால் யார் ராஜபார்ட், யார் ஸ்திரி பார்ட் என்பன போன்ற கேள்விகள் தான் கேட்கப்படுவதும், அவர்களுக்குத் தகுந்தாற் போல் வசூலாவதும் வழக்கமாயிருந்து வந்தது; ஆனால் இப்பொழுதோ அந்த நிலைமாறி என்ன கதை? (சோஷியல் ப்ளாட்டா? அல்லது வெறும் புராணிக்தானா?) யார் எழுதியது? என்று மக்கள் விசாரிக்கவும், கதையினுடைய கருத்துக்கே அதிக மரியாதை கொடுக்கவுமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலை நாட்டில் ஏற்படுவதற்கு சுயமரியாதைக்காரர்களின் சலியா உழைப்பே காரணம் என்பதை வெளியில் காட்டிக்கொள்ள மனம் இல்லாதவர்களும்கூட உள்ளூர ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

முன்பெல்லாம் சுயமரியாதைக்காரர்கள்தான் அதிலும் முக்கியமாக நம் பெரியார் அவர்கள்தான் கம்பெனிக்காரர்கள் நடத்தும் சீர்திருத்த நாடகங்களுக்குச் சென்று தலைமை வகித்துத் தனது கருத்துக்களை கூறிப் பொது மக்கள் இம்மாதிரியான நாடகங்களையும், இவைகளை நடத்துகிற நாடகக்காரர்களையும் தான் ஆதரிக்க வேண்டும்என்று அறிவுறுத்தியதன் பலன்தான் இன்று நடிப்புத் தொழில்காரர்களுக்கு சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தும், அவர்கள் போய்க் கூப்பிட்டால் மாட்டேனென்று சொல்லாமல் மந்திரிமார்கள் முதல் நாடகங்களுக்கு வந்து தலைமை வகித்து சீர்திருத்த நாடகங்களை—சினிமாக்களை ஆதரித்துப் பேசவுமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையாவது மறுக்க முடியுமா?

நமது தொண்டின் பயனாக மக்களிடையே புராணக் கதைகளுக்குச் செல்வாக்குக் குறைய ஆரம்பிப்பதையும், சீர்திருத்தக் கருத்துக்கொண்ட நாடகம்—சினிமாக்களுக்குக் கிராக்கி ஏற்பட்டு வருவதையும் கண்ட உடனேயே நாடகக் கம்பெனிக்காரர்களும், சினிமாப்பட முதலாளிகளும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள முன்வந்திருக்கிறார்கள்— அல்லது தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டியதாயிற்று.

முதலாளிமார்களே போக்கை மாற்றிக் கொண்டார்களோ—அல்லது நிலைமை அவர்களை மாற்றிக் கொள்ளும்படி செய்ததோ அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அதுபோலவே இந்த நிலைமை அதாவது சமூக நாடகங்கள் பிடிக்கக்கூடிய அளவுக்கு நாட்டு நிலை மாறியதற்கு நமது உழைப்புத்தான் அடிப்படை என்பதை அவர்கள் உணருகிறார்களோ—இல்லையோ அதைப்பற்றியும் நாம்கவலை கொள்ளவில்லை. நமக்கு இருக்கக்கூடிய திருப்தியெல்லாம் நமது உழைப்பு வீண்போகவில்லை என்பதுதான்.

எனவேதான், நமது நெடுநாளைய ஆசைக்கு இணங்க இப்போது சமூக சீர்திருத்த நாடகங்களும், சினிமாக்களும் பரவி வருகிற இந்தச் சமயத்தில் நாமும் அதில் கவனம் செலுத்தி அவைகளில் உள்ள பயன்தரத்தக்க காரியங்களைப் பாராட்டவும், திருத்திக்கொள்ளவேண்டிய சங்கதிகளை எடுத்துக்கூறவுமே "சினிமா—நாடக விமர்சனம்'' என்ற இப்பகுதியை நாம் ஆரம்பித்திருக்கிறோம் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆங்காங்கு நடைபெற்றுவரும் சமூக நாடகங்கள்—சினிமாக்கள் பற்றி சுருக்கமாய் விமர்சனம் எழுதி யனுப்புவதை வரவேற்கப்படும். [ஆ—ர்]

முக்கிய அறிவிப்பு

ஏஜண்டுத் தோழர்கள் ஒவ்வொருமாதமும் 10உக்குள் அந்தந்த மாதப் பட்டியல் தொகையைக் கண்டிப்பாய் அனுப்பி வைத்து விடவேண்டும்.

சந்தாதாரர்களும், ஏஜண்டுகளும் கடிதம் எழுதுங்காலங்களில், அவசியம் அவரவர்கள் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

மானேஜர்

பார்ப்பனீயம் பாய்வதற்குப் பல வடிவம் எடுப்பதைப் பாரீர்.

★

பார்ப்பனீயத்தின் படுமோசமான போக்கை, அதனால் ஏற்படும் அக்கிரமமான அழிவுகளை நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி அப்பார்ப்பனீயப் பிடிப்பிலிருந்து நாம் (திராவிடர்கள்) அகன்றால்தான் நமக்கு வாழ்வுண்டு என்பதையும் சொல்லி வந்திருக்கின்றோம்.

பார்ப்பனீயம் இந்த நாட்டில் நுழைந்த காலத்திலிருந்தே அதற்கு எதிர்ப்பு இருந்து வந்திருக்கின்றது. அதற்கு ஏற்பட்டிருக்கும் அளவற்ற எதிர்ப்புக்குப் பிறகும், அது இன்னும் ஆட்சி செய்கின்றதென்றால்,—ஆட்சியை ஆட்டி வைத்து வருகின்றதென்றால் அதற்குக் காரணம் அந்தப் பார்ப்பனீயத்தின் "எட்டினால் குடுமியைப் பிடி எட்டாத போனால் காலைப் பிடி" என்கின்ற போக்குத்தான்காரணம் என்றும் விளக்கி வந்திருக்கின்றோம்.

இந்தப் போக்கினாலேயே, அதாவது வளைந்து நெளிந்து மறைந்து நடத்தும் நடவடிக்கைகளினாலேயே, அதன் விஷக்கடிக்கு—வெறிப் பற்களுக்கு இரையானவர்களாகவும் இரையாகிக் கொண்டிருப்பவர்களாகவும் திராவிடர்கள் இருந்துவர வேண்டியதாயிருக்கிறது. இருந்தும், இவ்வளவு அழிவிற்குப் பிறகும்கூட திராவிட சமுதாயம் தனக்கு ஏற்பட்டு வரும் மீள முடியாத கேட்டையுணரவில்லை என்றால், இவ்வளவு மானமற்ற சமுதாயம் வேறு ஒன்றும் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது என்பதைத் தவிர நம்மால் வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ஆகஸ்ட்டுப்பதினைந்தை, ஆரியத்தின்—பார்ப்பனீயத்தின் சுதந்தரம் என்றும் சுயராஜ்ஜியம் என்றுமே நாம் சொல்ல வேண்டியதாக இருப்பதை, முன்பு ஒப்புக்கொள்ளாதவர்களும்கூட ஒப்புக்கொள்ளத் தக்கவிதமாய் ஆட்சி நடைபெற்று இப்பொழுது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பார்ப்பனீயம் திராவிடர்கள் மீது பாய்வதற்குத் தன் கொம்புகளை நன்றாகக் கூர்மையாக்கிக் கொள்ளுகிறது.

படையெடுத்து வந்த வெளிநாட்டவர்களுக்கெல்லாம் இந்த நாட்டைக்காட்டிக்கொடுத்து, தான வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தோடு நடந்து வந்தது பார்ப்பனீயம். வெள்ளையராட்சி ஏற்பட்ட பிறகு அதை நிலைக்க வைத்து, விக்டோரியா காலத்தில் ஒப்பந்தம் பேசித் தனது சுக வாழ்வுக்குக் கேடு இல்லாதபடி பார்த்துக் கொண்டு, முன்பு தன்னால் கூறிய மிலேச்சர்களுக்குப் பின்பு பூரண கும்பம் தூக்கிப் பூஜிக்க ஆரம்பித்தது பார்ப்பனீயம். அந்தக் காலத்தில் மற்ற மக்களையெல்லாம் நிரந்தர அடிமையாயிருக்கத் திட்டம் வகுத்துக் கொடுத்தே, தான் மட்டும் கங்காணியாக இருக்க வழி செய்து கொண்டது பார்ப்பனீயம். வெள்ளையராட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி பலமான நேரத்தில் அக்கிளர்ச்சி ஸ்தாபனத்தைக் கைப்பற்றிக் கொண்டு மற்றவர்களைப் பலி கொடுத்து உறிஞ்சிப் பிழைத்து வந்தது இப்பார்ப்பனீயம். இரண்டாவது உலக யுத்தம் தொடங்கிய பிறகு ஜர்மானியன் வரலாமென்று கனவு கண்டு, அதற்குத் தக்கவிதமாய் ஆயத்தப்படுத்திக் கொள்ள, அதாவது ஆரிய சாம்ராஜ்யபதியே! வருக! வருக! என்று வரவேற்புக் கொடுப்பதற்காக ஜர்மன் மொழியைக் கற்க ஆரம்பித்தது பார்ப்பனீயம்.

வெளியுலக நெருக்கடியின் காரணமாகக், கலகக்காரர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு தன்னுடைய நன்மைக்குக் கேடில்லாதபடி, இந்த நாட்

எட்டி

டை வடநாட்டுப் பாசிஸத் தலைவர்கள் கையில் ஒப்படைத்து விடுகிறேன் என்று வெள்ளைக்காரன் கூறிய பிறகு; இந்த நாட்டுப் பார்ப்பனீயத்துக்கு ஒரே கும்மாளமாகக் கொண்டாட்டமாக ஆகிவிட்டது. தன்னினத்திற்கு மறைவாகச் சாதகங்களைத் தேடிக் கொண்டு வந்த நிலைமை மாறி, வெளிப்படையாகவே கொக்கரித்துத் திரியும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு எல்லா வகையான பார்ப்பனர்களும், லோககுரு சங்கராச்சாரியிலிருந்து லோட்டா அலம்பும் கிருஷ்ணமூர்த்தி வரை எக்காளமிட்டுத் திரியும் நிலையை இன்று பார்த்து வருகின்றோம். இந்த முயற்சிக்கு நம்மவர்கள் என்று சொல்லத்தக்க சில திராவிடர்களும், விபீஷணர்களாகி இருக்கும் நிலையை எண்ணும் போதுதான் நாம் உண்மையிலேயே வருந்த வேண்டியதாயிருக்கிறது.

"இந்து மதத்திலும் பண்பாட்டிலும் நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சிரத்தையுண்டாக்கப் புத்தகம் ஒன்று தமிழில் எழுதுவோருக்கு 1000 ரூ. பரிசு. புத்தகம் 12 வயது முதல் 16 வயது வரையுள்ள பையன்களுக்கும் பெண்களுக்கும் படிக்கத்தக்கதாயிருக்க வேண்டும். சர். எஸ். வரதாச்சாரி திவான்பகதூர் கே. சுந்தரம் செட்டி கே. பாலசுப்பிரமணிய ஐயர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் டாக்டர் வி. ராகவன் ஆகியோர் தீர்ப்புக் கூறுவர். இத்தீர்ப்பு கும்பகோணம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகளின் அங்கீகாரத்துக்குட்பட்டதாகும்" என்று ஒரு செய்தி சு. மி. வில் வெளியாகி இருக்கிறது.

நம் சிறுவர் சிறுமிகள் யார்? திராவிடச் சிறுவர் சிறுமிகளைத் தானே இங்கே "நம்" என்று உரிமை கொண்டாடப்படுகின்றது. இந்து மதம் என்று ஒரு மதமே இல்லை என்று பலகாலமாக நாம் சொல்லி, உண்மையாய் இல்லாத ஒன்றை நாம் ஒப்புக்கொண்டு வந்ததினாலேயே இந்த இழிவான நிலைமைக்கு நாம் ஆளாகி வந்திருக்கின்றோம். இதனைப் பல ஆராய்ச்சியாளர்களும் சைவ வைணவப் பண்டிதர்களும்கூட ஒப்புக்கொண்டு பேசி எழுதி வந்திருக்கின்றார்கள். அப்படியிருக்க இம்மாதிரியான ஒரு முயற்சியை ஒரு மடச்சாமியார் என் தொடங்கவேண்டும்? இதனைமற்றைய ப்பார்ப்பனர்கள்என் ஆதரிக்கவேண்டும்? அதில் சுந்தரங்களும் சுப்பிரமணியங்களும் என் அந்த ஜோதியில் கலந்து கொள்ளவேண்டும்?

"பார்ப்பன ராஜ்யம் நடக்கிறது. வெள்ளைக்காரனாட்சியினால் வர்ணாச்சிரம தருமம் மாறிப்போய் விட்டது. வர்ணாச்சிரமத்தை நிலைக்கவைக்க நாம் மகாத்மாவை படைத்துக்கொண்டிருக்கின்றோம். வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்து பல சூத்திரர்கள் நான் என் சூத்திரன்? நான் என் தேவடியாள் மகன்? என்று கேட்க ஆரம்பித்திருக்கின்றார்கள். இவர்களை நாம் எப்படியாவது அடக்கிவிடுவோம். அதாவது அவர்களிலேயே சிலருக்கு உத்தியோகங்களைக் கொடுப்பது; சிலருக்குப் பண ஆசை காட்டி வியாபாரங்களுக்குச் சலுகை காட்டுவது. இவ்வாறு செய்து இவர்களைக்கொண்டே மற்றவர்களை அடக்கிவிடுவோம். எதிர்காலத்திலேயும் இம்மாதிரியான தொந்தரவுகள் இருக்கக்கூடாது. அதற்கு இளமையிலேயே இந்த வருணாச்சிரம தருமத்தைப் புகுத்திவிடுவோம். இப்போதிருக்கிற கல்வி மந்திரி நம்முடைய அடிமை. அந்த அடிமையைக்கொண்டு திராவிட உணர்ச்சிகொண்ட ஒருசில ஆசிரியர்களையும் ஒழித்துவிட ஏற்பாடு செய்துவிட்டோம். திராவிட உணர்ச்சியை ஊட்டிவந்தவர்களை ஒழித்துவிட்டால் மட்டும் போதாது, அதற்கு மாறான

நம்முடைய கருத்தை, நம்மினத்தின் பெருமையை, திராவிடர்கள் என்றுமே சூத்திரர்களாக இருக்கத்தான் வேண்டுமென்பதை, நிலைநாட்டுவதற்கு இனிப் புராணங்கள் போதாது. ஆகலால் "பழைய கள் புதிய மொந்தை" என்பதுபோல் பழைய சரக்கையே சிரத்தையுண்டாக்கத்தக்க வகையிலே எழுத வேண்டும். அவ்வாறு எழுதியதை எ சூத்திர அவினாசியே! பள்ளிக்கூடங்களிலே நாஸ்திகம் பரவிவிட்டது, அதைப் போக்கவேண்டுமானால் [illegible] பாடத்திற்குவை, பிள்ளைகளைப் படிக்கச் [illegible] என்று சொல்லவேண்டும். [illegible] ஆகவேண்டும். [illegible] அதாவது அதைப் பள்ளிக்கூடப் பாடத்திற்குக் கட்டாயமாக வைக்காது போனால், அந்த அவினாசியையே ஒழித்துவிடுவோம் என்பது அவினாசிக்குத்தான் தெரியாதா என்ன?" என்கின்ற எண்ணமே தவிர இதற்கு நம்மால் வேறொரு அர்த்தமும் சொல்ல முடியவில்லை. இந்து மதத்திற்குப் புத்துயிர் தரும் இந்த முயற்சியிலே, "இந்துலா"விலேயே மூழ்கி அதற்கு அடிமையாகிவிட்ட சுந்தரம் செட்டியும் சைவமணி சுப்பிரமணிய முதலியாரும் தீர்ப்புக்கூற உடன்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையாயிருந்தால் நாம் அவர்களுக்குச் சொல்லுகிறோம்.

ஐயா. பெரியவர்களே! உங்களுக்கு வயதோ ஆகிவிட்டது. இதுவரைக்கும் நீங்கள் பிறந்த இனத்திற்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறீர்களா? அதுதான் இல்லையென்றால் தீமையாவது செய்யாமலிருந்திருக்கிறீர்களா? உங்களிலே ஒருவர் நீதிபதி. மற்றொருவர் சைவப்பண்டிதர். கடைசி காலத்திலேகூட திராவிடர்கள் உங்களை மறக்கக்கூடாது என்பதற்காகவா இந்த வேலை. நீங்கள் ஜூரிலே இருவராக இருந்து அளிக்கப்போகின்ற தீர்ப்பு, நீங்கள் பிறந்த இனம் உங்களுடைய பிற்கால சந்ததி 4வது 5வது சாதிதான், அந்தந்தச் சாதியார்கள் அவரவர்களுக்குக் குறிப்பிட்ட வேலையைத்தான் செய்யவேண்டும் என்றுகூறப்போகின்ற தீர்ப்புத்தானே. இந்தத் தீர்ப்பைக்கூறி நீங்கள் வீண் பழியைத் தேடிக்கொள்ளாதீர்கள் என்பதுதான்.

லோக குருவின் இம்மாதிரியான முயற்சியினால் கொண்டுவரவிருக்கும் நூல் காலப்போக்கில் நமது திராவிட இளைஞர்களுக்குப் பாட நூலாக—அதுவும் கட்டாயமாகப் படிக்கவேண்டியதாக இருக்கப் போகின்றது என்பதை நாம் இப்பொழுதே சொல்லுகிறோம். திராவிடப் பெருங்குடி மக்களே! இந்த ஏற்பாட்டை அதாவது என்றைக்கும் நீங்கள் தேவடியாள் பிள்ளையாகவே இருப்பதற்கு ஒப்புக்கொள்ளப் போகிறீர்களா என்பதுதான் நமது கேள்வி? இதுதான் பார்ப்பனீயத்தின் ஆசை என்பதை நாம் அதிகப்படுத்திக் கூறுகின்றோம் என்று யாரேனும் நினைத்தாலும் நினைக்கலாம். இதோ கீழே படியுங்கள்:—

"பாரதநாட்டு மக்களாகிய நம்மவர்கள் சென்ற நூற்றாண்டு முதல் நமது கலை, நாகரிகம், தர்மம் இவைகளைக் கற்றறிந்துகொள்ள சந்தர்ப்பமில்லாமல் ஆங்கிலத்தைக் கற்கும் போட்டியிலேயே ஈடுபட்டதனால் நமது தர்மத்தின் ஸ்வரூபம் விளங்காமலும் அதில் [illegible] குறைந்ததும் காணப்படுகின்றது. இந்நிலையில் நமது முன்னோர்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக வழிபட்டு நம்முடைய உண்மையான நாகரிகம்நிலைபெற்று நிற்கும்படி, பொது மக்களுக்கு உதவியிருக்கும் அற முறையை நம் தர்ம நூல்களில் உள்ளவாறு அறிந்து அநுஷ்டிப்பது நம் எல்லோருடைய கடமையுமாகும். இந்நோக்கத்தோடு ஸ்ரீமடத்தின் ஆதரவுடன் இந்து கலாச்சாரக் கழகத்தாரால் அவ்வப்பொழுது அற (தார்மிக) வெளியீடுகள் பதிப்பித்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வெளியீடுகள் கூடிய வரையில் எல்லாப் பொது மக்களையும் எட்டும்படி, பிரசாரம் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபடச் சௌகரியமுள்ளவர்கள் எல்லோரும், இத்தொண்டில் உதவுமாறு இதன் மூலம் கோரப்படுகிறது. இவ்விதம் ஈடுபடச் சௌகரியமுள்ளவர்கள், தங்களுடைய முழுப் பெயர் விலாசங்களை மடத்து மானேஜருக்காவது அல்லது கும்பகோணம் இந்து கலாசார கழகத் தலைவர் ஸ்ரீ ஆர். கந்தசாமி மூப்பனார் என்ற விலாசத்திற்காவது எழுதி அனுப்ப வேணும். தாங்கள் வசிக்கும் இடத்திற்குச் சமீபமாக எவ்வளவு தூர எல்லைக்குள் பிரசாரம் செய்ய சௌகரியப்படும் என்பதையும் தெரிவிக்கவேணும். தங்களுக்குத் தெரிந்த வரையில் எந்தெந்த ஊர்களில் பஜனை மடங்கள் முதலிய சைவ வைஷ்ணவ ஆஸ்திக ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்பதையும் கூடிய வரையில் முழு விபரங்களுடன் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது."

இது காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருவின் மடம் ஏஜண்டு தெரிவித்த விக்ஞாபனம். (20-11-47 சு. மி. வில் உள்ளதை அப்படியே இங்கு தரப்பட்டிருக்கிறது.)

இதைத் திராவிடத் தோழர்கள் பல முறை கருத்தூன்றிப் படிக்க வேண்டுமென்பது நமது ஆசை. வெள்ளைக்காரனாட்சியினால் வருணாச்சிரம தருமம் குலைந்து போய் விட்டது. (உண்மையில் பாதுகாத்தே வந்திருக்கிறது) இப்போது வந்திருக்கிற ராமராஜ்ஜிய ஆட்சியில் இது பழையபடியும் நன்றாக இடம் பெறவேண்டும் என்பதுதான் பார்ப்பனீயத்தின் முயற்சி என்பதை இந்த விக்ஞாபனத்தின் முதற் பகுதி அறிவிக்கிறதே தவிர வேறென்ன?

இந்தச் செயலுக்கு ஒரு கழகமாம்! அதற்கு மூப்பனார் தலைவராம்! தார்மீக வெளியீடு வழங்க ஏற்பாடாம்; அதைப்பிரசாரம் செய்யச் சௌகரியமுள்ளவர்கள் உதவவேண்டுமாம்! எப்படியிருக்கிறது பார்ப்பனீத்தின் பாய்ச்சல்?

ஏமாந்த நம் சோணகிரிகள் இதற்கும் அகப்படாமல் போகமாட்டார்கள். நாலு சோணகிரிகளை மேய்ப்பதற்கு ஒரு பார்ப்பான் வீதம் பாதுகாவலுக்குப் போட்டு, இந்தப் பிரசாரம் நம் நாட்டுக் கிராமங்களில் நடப்பதோ, அதற்கு நம்முடைய சோணகிரிகளே பணம் கொடுப்பதோ நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இராமாயணம் பாரதங்களை பழைய சோணகிரிகளான ராஜாக்கள் இருந்த காலத்தில், பிரசாரம் செய்வதற்கு ஒரு ஏற்பாடாகி இருந்ததாம். இது கதையில்லை. கல்வெட்டுச்சொல்கிறது. ஊருக்கு ஒரு பார்ப்பான். அவன் அந்தந்த ஊரிலே இராமாயணம் பாரதங்களை மாற்றி மாற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். அந்த ஊரிலே அவனே பொருளைச் சம்பாதித்துக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். எப்படிப் பொருளைச் சம்பாதிக்கிறது? தெரியுமா? நாட்டு ராஜா பல வரிகள் மூலம் வசூல் செய்வது போல இந்த "ஊர் ராஜா" அரசன் போடாத வரிகளையெல்லாம் போட்டு வசூல் பண்ணிக்கொள்ளுகிறதாம். அதாவது நாட்டு ராஜா மத்திய கவர்ன்மெண்ட் என்றால் இந்த ஊர் ராஜா மாகாண கவர்ன்மெண்ட் மாதிரி. ஆமா. மாதிரிதான். ஏனென்றால், நம் மாகாண கவர்ன்மெண்ட் தன் தேவைக்கெல்லாம் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதைப் போல இந்த ஊர் ராஜா அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதில்லை. இந்த மாதிரியான ஒரு ஏற்பாடு இனி நம் நாட்டிலே நடந்தால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டிலே தமிழுணர்ச்சி பெருகியிருப்பதை யறிந்த நயவஞ்சகப் பார்ப்பனீயம், இதற்குப்பெயர் கொடுத்திருக்கிறது கலாச்சாரக் கழகம் என்று. இதற்குத் தலைவர் கந்தசாமி மூப்பனார். திராவிடன் கையைக் கொண்டே திராவிடன் கண்ணைக் குத்த முயலும் பார்ப்பனீயத்தின் படுமோசத்தை

—ஜாலவித்தையை திராவிடர்களே தெரிந்து கொள்ளுங்கள்.

மதுவிலக்கைச் செய்துவிட்டு, மத போதையை ஊட்டி வருகிறது நமது ராமராஜ்யம். இது ஆச்சாரியாரின் அற்புதமான மூளையிலே உதித்த ஆலோசனை. இந்த ராமராஜ்யத்திலே லோக குருக்கள் கட்டளைக்கிணங்க மூப்பனார்கள் "இந்து பல்லக்கைச்" சுமப்பார்களேயானால் கேட்கவா வேண்டும்? நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிகவிரைவிலேயே, பழைய காட்டுமிராண்டித் தனமான ஆட்சியை ஏற்படுத்த என்னென்ன செய்யவேண்டுமோ அவையெல்லாம் செய்யப்படுகின்றது என்றுதான் சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

"இந்த லோககுரு" (எந்த லோகத்திற்கோ) முயற்சி தவிர, பிராமண சேவா சங்க முயற்சிகள்வேறு நடந்த வண்ணமாயிருக்கின்றன. சங்கக் காரியதரிசி, முதல் முதல் தஞ்சை ஜில்லாவில் சுற்றுவதாகத்திட்டம். அங்கங்கே பார்ப்பன மிராசுதாரர்களைக் கண்டும் நமது "மூப்பனார்களை"க் கண்டும் என்னென்ன முறையில் எப்படி எப்படி திராவிடர்கள் பொருள்களைத் திரட்டலாம்? அக்கிரகாரங்கள் இனி எப்படி நடந்துகொள்ளவேண்டும்? என்று வகுத்திருக்கும் திட்டங்கள்—ஆலோசனைகளைக் கூறலாம். இந்தச் சங்கத்திலே படைவேறு திரட்டி பயிற்சியும் கொடுக்கிறார்களாம். "பாப்பாரப் பிள்ளையாவது நண்டு பிடிக்கிறதாவது" என்று நாம் கேலி பேசலாம். இவ்வாறு கேலி பேசுவது, ஒருவேளை திராவிட-ஆரிய இரத்தக்கலப்பு ஏற்படுவதற்கு முன்னாலே பேசினால் ஏதாவது அர்த்தமிருக்கலாம். இப்போது அவ்வாறு கேலிபேசுவது நம் தலையில் நாமே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதுபோல்தான் என்பது நமது எண்ணம்.

இப்போது சமீபகாலங்களில் நடந்த செயல்களைநினைப்பூட்டிப்பாருங்கள். கல்லூரிகளிலே பார்ப்பன மாணவர்களுக்கு இடம் போதவில்லை என்பதை யறிந்தவுடனே,எவ்வளவு விரைவாகத் திராவிடர்களுடைய பொருள் பலத்தைத் திரட்டி எத்தனை லட்சங்களைக்கொண்டு விவேகானந்தா கல்லூரியைக் கட்டி முடித்து "பார்ப்பனர்களுக்கு மட்டும்" என்று போர்டு போடாமலே பார்ப்பன மாணவர்களையே சேர்த்துக்கொண்டு பார்ப்பனீயம் எப்படி ஒரு கல்லூரியை நடத்தி வருகின்றது? கோவிலுக்குள்ளே செருப்புக்காலோடு நடந்து கருப்புச் சட்டைக்காரர்கள் ஆபாசமாகப் பேசினார்கள் என்ற கட்டுக்கதையைப் பரப்பிக்,காலிகளைக்கொண்டு மதுரையிலே பார்ப்பனீயம் எப்படி தன் வெறிச்செயலை நடத்திக் காட்ட முடிந்தது? தன் பொருளைச் செலவு செய்யாமலே, தான் போர்க்களத்தில் இறங்காமலே பார்ப்பனீயம் எவ்வாறு தன் காரியங்களிலே வெற்றிபெற்று வந்திருக்கிறது?

எதிரியை—எதிரியின் பலத்தைக் கேவலமாகக் கருதுவது ஒருவருக்கு ஒரு நாட்டாருக்கு அழிவையேதரும் என்பது அறிஞர்கள் முடிவு. முதலாவது உலக மகாயுத்தத்திலே ஜர்மனி தோற்றதற்குக் காரணம், ஜெர்மன் படைவீரர்களுக்கு, ஐரோப்பியர்களின் கோழைத்தனத்தைப்பற்றியும் வஞ்சக தந்திரச் செயல்களைப்பற்றியும் ஏராளமான கதைகளைச் சொல்லி, ஐரோப்பியர்களைக் கேலியாகக் கருதும்படி ஜர்மானிய வீரர்களுக்கு, ஜர்மானியத் தலைவர்கள் ஊட்டிவந்த உணர்ச்சியே காரணமாகும் என்று அந்நாட்டுத் தலைவர்கள் கூறுகின்றனர். இந்தப் படிப்பினையை நாம் திராவிடர்களுக்கு இந்த நேரத்தில் நினைப்பூட்டுகின்றோம்.

இவையல்லாமல் சமஸ்கிருத சாகித்ய பாரிஷத் என்ற பெயராலே செத்த மொழியைச் சிங்காரிக்கும் சாஸ்திரிகள் வேறு சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு அங்கங்கே கூடித் திட்டமிட்டு வருகின்றனர்.

இவைகளையெல்லாம் திராவிடத் தோழர்கள், அவர்கள் எக்கட்சியினராயிருந்தாலும் எண்ணிப்பார்த்து ஒரு முடிவிற்கு வரவேண்டாமா? நாம் திராவிடர் என்கின்ற உணர்ச்சியைக் கொள்ளவேண்டாமா? திராவிடத் தோழர்களே! தயவுசெய்து எண்ணிப் பாருங்கள், என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

மைப்படுவதைப் பார்க்கின்றோம். நாம் பலநூற்றாண்டுகளாய்ச் செய்துவந்த கடவுள்வழிபாடு பலன்தரவில்லை. கிரியைச் சடங்குகள் நமதுகாலத்தையும், பணத்தையும் வீணாக்கினதுமல்லாமல் நம்ஆண்மையை நசுக்கி நம்மறிவையும் தடுத்துவிட்டது. மூடபுத்தியால் நாம் செய்ததானங்களெல்லாம் நம்மைஏழைகளாக்கிவிட்டன.நம்சமயத்தின்பேரால் ஒழுகின ஒழுக்கமெல்லாம் பாவமாகி நம்மை எதிர்த்துநிற்கும் சத்துருக்களாகிவிட்டன. ஒருமுதல்வன், மூன்று சர்வாதிகாரி, நாலுவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம்.இவைகளின் கிளைகளோ அனந்தம். இவைகளைப்பற்றி நமக்குச்சொல்லும் பண்டிதர்களும், சாஸ்திரிகளும் கணக்கற்றவர்கள்.இவ்வளவிருந்தும் உண்ணல், உடுத்தல்,களித்தல், கல்வி, அரசு, இவைகளில்லாமையின் துன்பங்கள் நமது உயிரைத்தின்னுகின்றன. மற்றஉலகத்தார்களால் அடியும் மிதியும் பட்டு அவஸ்தைப்படுகின்றோம். அதனால் புறத்திலிருந்து வந்த அவமானமும், கஷ்டமும் நம்மை மனிதர்களோடு மனிதர்களாகச் சேர்க்காமல் செய்திருக்கிறது. அதற்காக நாமெல்லாம் சுயமரியாதை என்னும் அக்கினியால் சுத்திபண்ணிக்கொள்ள வேண்டும். அந்தஅக்கினியில் நமதுபாவங்களெல்லாம் வெந்துபோகும். அஞ்ஞானப்புகை விலகும், சோம்பற்குணம் சாம்பலாகும் என்பதை உங்களுக்குச் சொல்லவே சுயமரியாதைச் சங்கம் வந்திருக்கின்றது.

இல்லாததை இல்லாதவர்களுக்குக் கொடுங்கள். நமக்குவேண்டியதில்லை. இல்லாததை உண்டுபண்ணுங்கள். அதையே உபதேசியுங்கள். அதிகத்தித்திப்பு திகட்டி, வயிற்றில் அதிகப்புளிப்பையுண்டுபண்ணி ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றது. கடவுள் உணர்ச்சியும் சமயப்பற்றும் அமிர்தத்திற்குமேலென்றாலும், அவைகள் சாக்கடையில் போய்ச்சேர்ந்து விஷக்கிருமிகளாய்ப் போய்விட்டன: நம்மவர்கள் மண்டையில்,மட்டுக்கு மிஞ்சின மதவிஷயங்கள் திணித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிரியைச் சடங்குகளோ அளவிற்கு மிஞ்சி அழுந்திக்கிடக்கின்றன. பண்டிதர்களால் சாஸ்திர சித்தாந்தங்களும் மதசம்பிரதாயங்களும் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. இன்னும் குருக்கள் கட்டுப்பாட்டை, சமயமென்று பண்டிதன்கூடக்கட்டி அழுகின்றானேயல்லாமல், உண்மைச்சமயத்தின் தருமத்தை உணரவில்லை. தருமம்நசித்தால் நான் அவதாரம் செய்வேன்என்று பகவான் சொன்னதாகப்படித்தோமேயல்லாமல், சமயம்நசித்தால் நான்அவதாரம் செய்வேன் என்று பகவான் சொன்னதாக ஒரு புஸ்தகத்திலும் பண்டிதரும் படித்தேயிருக்கமாட்டார்கள். சமயத்தின்பெயரால் புரோகிதனுக்கும், சாமியின்பெயரால் அர்ச்சகனுக்கும், குலத்தின்பெயரால், கிரியைச் சடங்குகளின் பெயரால் பார்ப்பானுக்கும், அதிகவட்டியின்பெயரால் கும்பாபிஷேகத்திற்கும் செலவுசெய்து விட்டாலே தருமம்முடிந்ததென்று இன்னும் நமது பணக்காரர்கள் நினைப்பதுபோலவே பண்டிதர்கள் உபதேசமுமிருக்கின்றது. இத்தத்தருமங்களால் யாதொருநன்மையும் இதுவரை உண்டாகவில்லை. ஜனசமூகத்தினருக்கு நன்மை பயக்கக்கூடிய கல்வி, தொழில்,நோய்க்குப் பரிகாரம், விவசாயம் முதலியவைகளுக்கு உதவி செய்வதே தருமமென்று சுயமரியாதை இயக்கம் சொல்ல வந்திருக்கின்றது.

(தொடரும்)

ஏடு தீர்ப்பு

வெண்மதி.

[திங்கள் வெளியீடு]

ஆசிரியர்: Dr. டி. எஸ். ராஜலட்சுமி.
தனி இதழ் ஆறணா.
சென்னை.

டிம்மி 1/8. 72 பக்கங்களைக் கொண்டதாய் 4-வது மலர் நம் பார்வைக்கு வந்தது. பெண்களுக்காகப் பாடுபடும் என்று ஆசிரியரால் கூறப்பட்டிருப்ப தற்கேற்ப இன்னும் அதிகமாக எல்லாத் துறைகளிலும் "பெண்ணலம்" பேண முன்வருவதும், குறிப்பாக மூடப் பழக்க வழக்கங்களைப் போக்கும் வகையில் வெண்மதி தன் நிலவை வழங்குவதே ஏற்றது என்பதையும் ஆசிரியர் கைக்கொள்ள வேண்டுமென்பது நம் ஆவல்.

தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கிடமின்றி ஒண்டவந்தவர்கள் ஒடுக்கிய காலத்தில், தமிழ் ஆட்சி செலுத்திய இடம் ஒன்று உண்டென்றால், அது தமிழ் நாட்டுப் பெண்களிடத்தேதான். அப்பெண்ணுலகின் நன்மைக்காகப் பாடுபடத் தோன்றியிருக்கும் "வெண்மதி", "வர மாதத்திலிருந்து" "நம் மாத்து" போன்ற தமிழ் மரபைக் கெடுக்கும் முறையில் தொடர்களைக் கையாளுவது நியாயமில்லை என்பதை ஆசிரியர் இனியாவது எண்ணுவாராக!

எல்லா வகையிலும் நிறைந்த பொலிவுடன் வெண்மதி விளங்கவேண்டுமென்பதே நம் விருப்பம்.

தோழன்

[மாத வெளியீடு]

ஆசிரியர்: ஏ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ.
8-ஏ பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை.

[கிரவுன் 1/8. 48 பக்கங்கள். தனி இதழ் 0-4-0. ஒரு ஆண்டுக்கு 3-0-0.]

தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்களைத் திராவிடத் தோழர்கள் "பார்பிடோ" ஜனார்த்தனம்' என்றே பேரன்போடு அழைப்பார்கள். காரணம் அவர் பேச்சிலே அனல் பறக்கும், அறிவொளி வீசும். இதே போக்கில் எழுதுவதிலும் வல்லவர் என்பதைத் தோழர் மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றார்.

தோழனிலுள்ள தனிச் சிறப்பு, திராவிடத் தெலுங்கரின் கருத்தையும் திராவிடத் தமிழருக்கு வழங்குவது என்பதையறியும் போது நாம் பெரு மகிழ்ச்சி கொள்ளுகின்றோம்.

பெரியாரவர்கள் விரும்புவது போல, "தோழன்" திராவிடர்களுக்கு உண்மை ஆருயிர்த் தோழனாக மிளிர்ந்து வருவான் என்பதுணர்ந்து, தங்களின் தோழனுக்குப் பேராதரவு செய்து ஆதரிக்க வேண்டுவது திராவிடர்களின் கடமை எனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உத்தமமித்திரன்

(வாரப் பதிப்பு)

ஆசிரியர்: கே. பி. எம். ஐ. குர்மா.
தனியிதழ் 0-4-0
ஒரு ஆண்டுக்கு 12-0-0
246, அங்கப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

[கிரவுன் 1/4. 32 பக்கங்கள்]

"இந்தியாவின் சுதந்தரம் என்ற படகை இரண்டாக வெட்டி விட்டனர் வெள்ளையர். அது கடலில் மூழ்கி விட்டது. அதை மீட்டுச் சுதந்தரப் படகைச் சரி செய்வதே தனது நோக்கம் எனவும் கட்சிச்சார்பில்லாமல் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு உழைப்பதெனவும் கூறுகின்றார் இதன் ஆசிரியர்.

ஆசிரியரின் விசேஷ நிருபர் அனுப்பியிருக்கும் ரகசியக் குறிப்பு என்று "திராவிடஸ்தான் ஆரம்பத் திட்டம்" என்ற தலைப்பில் வெளியாகியிருப்பது அர்த்தமில்லாதது மட்டுமல்ல, மிக ஆபாசமானதாகவும் காணப்படுகின்றது.

மற்றவர்களும்—பின்பற்றுவார்களா?

பெரம்பலூர் தாலுகா அம்மாபாளையத்திலுள்ள பழங்குடி திராவிட மக்கள் பன்னெடுங்காலமாக நடத்தி வந்த சுடலை நொருத்தல் (அதாவது சுடுகாட்டில் பிணம் கொளுத்தல்) என்னும் வழக்கத்தை தோழர் கே. பிச்சமுத்து அவர்கள் முயற்சியால் இவ்வாண்டு முதல் நிறுத்திவிட்டார்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றையும் "குடி அரசு" பத்திரிகை, சிறுவர் பகுதி, அன்னாருக்கு எழுதிக்கேட்போம். அவர் நமக்கு எல்லா வகையிலும் உதவுவார் என்றே நம்புகிறேன். அத்த நம் பிக்கையின் பேரிலேயே அவருக்கு ஒரு கடிதம்கூட எழுதி இருக்கிறேன். அனேகமாகப் பதில் அடுத்தவாரம் நம் கைக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

சு:- ரொம்ப சரி! அடுத்த வாரம் அவர் பதிலைப் பார்த்துக்கொண்டு பிறகு சங்கம் அமைப்போம்.

தாய்மார்களே! கவனியுங்கள்

தீபாவளி, கார்த்திகை தீபம் முதலான பண்டிகைகளைச் சென்ற மூன்று வருஷகாலமாகவே கொண்டாடாத தாய்மார்கள்:—

பெரியகாஞ்சீவரம்

தோழியர்கள்
துலுக்காணிபம் அம்மையார்.
எஸ். முனிரத்தினம் அம்மையார்.
எஸ். விசாலாட்சி அம்மையார்.

பன்னீர்க்குளம்
தோழியர். சோலையம்மையார்.

ஆத்மார்த்தம், விதி, அல்லது கடவுள் செயல் என்று சொல்லப்படும் இம்மூன்றையும் அழிக்க தைரியமும் சக்தியும் உடையவர்களே மனிதனுக்கு விடுதலை சம்பாதித்துக் கொடுக்க அருகராவார்கள்.

ராஜவாழ்த்தும், கடவுள் வாழ்த்தும் மனிதனின் அடிமைத் தனத்திற்கு அஸ்திவாரக்கல் நடுவதாகும்.

ஈ. வெ. ரா.

* *

தொட்டதற்கெல்லாம் கடவுள் செயல் என்று சமாதானம் சொல்லுகின்றவர்கள் தங்கள் தப்பிதத்தின் காரணத்தை உணராதவர்கள், அல்லது தவறுதல்களை உணர்ந்து அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றவர்கள் ஆவார்கள்.

ஈ. வெ. ரா.

மறைவு

ஈரோட்டில் நீண்டகாலமாக "குடி அரசு" ஆபீஸின் மானேஜராய் இருந்து தொண்டாற்றிவந்த தோழர் எ. நல்லசாமி அவர்களின் தலைமகனார் புதல்வனும் திராவிடர்கழக உறுப்பினரும் கருஞ்சட்டைப்படைத் தொண்டருமாகிய தோழர் எம். நாராயணசாமி 1-12-47 ந்தேதிபகல் இரண்டுமணிக்கு இயற்கை எய்தினார். மறுநாள் காலை 10-மணிக்கு ஈரோட்டு மைதானத்தில் எவ்விதச் சடங்குமின்றி அடக்கம்செய்யப்பட்டதென அவரின் நண்பர்கள் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கல்லிற் கடவுள் இல்லவேயில்லை.

Edited, Printed and Published by N. Karivaradasamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.